இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்றேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:

# தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 41 சோபகிருது வருடம், ஆடி மாதம் 32ஆம் திகதி வியாழக்கிழமை
(17.08.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 29, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

BEAT the HEAT
The Reliable Fan
1st August to 31st August 2023

DISCOUNT 15% (On selected models only) Cash or Card
*Conditions apply

KDK SINCE 1909 JAPAN

Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust

ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# நாடு தமிழர்களுடையதல்ல!



## மேர்வின் சில்வா மீண்டும் எகத்தாளம்

## தமிழர் தலைகொய்யும் நிலைப்பாட்டிலும் மாற்றம் இல்லை என்கிறார்

நா. தினுஷா

இலங்கையானது தமிழர்களுக்கு சொந்தமான நாடல்லவென மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா. தமிழர்கள் அடங்கிப்போக வேண்டுமென்றும் அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

''இந்த நாடு எங்களுடையது. தமிழர்களினுடையதல்ல. இந்த நாட்டின் மீது சோழ படையெடுப்பின்போது வந்து தோல்வியுற்று விரட்டியடிக்கப்பட்டவர்களில் எஞ்சியவர்களே தமிழர்கள். சோழர்களை இந்த நாட்டிலிருந்து துரத்தியடிக்கும்போது தலைமறைவாகியிருந்தவர்களே தமிழர்களாக தற்போது இந்த நாட்டில் இருக்கிறார்கள். இங்கு அரசியல் உரிமையை கோருவதற்கான உரிமை அவர்களுக்கு இல்லை.

இருந்தபோதும், பௌத்த தர்மத்தை நம்புபவர்களாகிய சிங்களவர்கள் ஏனைய சமயங்களை மதிப்பவர்கள். அதனடிப்படையில், விரும்பினால் எங்களுடன் கைகோர்த்து இருக்க முடியும். வடக்கு, கிழக்கு, தெற்கு, வடமத்தி என்ற மாகாண வேறுபாடுகள் எங்களுக்கில்லை. எமது நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் ஆகிய சகல இனத்தவர்களும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் தேவை ஏற்பட்டால் விகாரை, கோவில், பள்ளி, தேவாலயத்தை நிர்மாணிக்க முடியும்.

விகாரையொன்றை நிர்மாணிப்பதற்கு அவர்களிடம் அனுமதி கோரவேண்டியதில்லை. கோவில்கள் இருக்கும் ஒவ்வொரு இடமும் பௌத்த விகாரைகள்.

எமது அரசர்களுக்கு இங்குள்ள பெண்கள் அழகாக இருக்காததால் இந்தியாவிலிருந்து பெண்களை அழைத்து வந்தார்கள். அந்தப் பெண்களுடன்...

02 பக்கம்

## நீர் தேடி வரும் விலங்குகள் இறைச்சிக்காக சிக்கவைப்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

இயற்கை நீர் வளங்கள் அதிகமாக உள்ள இரத்தினபுரி மாவட்டத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக நீர் நிலைகளில் நீர் வற்றியுள்ளமையே இந்நிலைமைக்குப் பிரதான காரணமாகும்.

இதனால் இப்பகுதிகளில் வசிக்கும் உயிரினங்களுக்கு பாரிய பாதிப்புகள் ஏற்பட்டு வருவதாக வனப் பரிபாலன சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிகளை உள்ளடக்கிய உடவளவை சரணாலயம், கல்தோட்டை ஹம்பேகமுவ, சிங்கராஜா போன்ற பல அண்மித்த காடுகளில் உள்ள விலங்குகள், பிராணிகள் இந்நிலைமையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, காடுகளில் உள்ள நீர் நிலைகளில் இவ்வாறு நீர் வற்றியுள்ளதால் மிருகங்கள், பிராணிகள் நீர்தேடி கிராமங்களை அண்டிய பிரதேசங்களை ஆக்கிரமிப்பதாகவும் இதனால் கிராம மக்கள் ஆபத்தை எதிர்நோக்குவதோடு, பிராணிகள் இறைச்சிக்காக கொல்லப்படும் பரிதாப நிலைமை உருவாகி வருவதாகவும் கிராம மக்கள், வனப் பாதுகாப்பு அதிகா ரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## 13 ஆவது திருத்தம் விரைவு அமுலில்!



### சி.வி.விக்னேஸ்வரனிடம் ஜனாதிபதி ரணில் உறுதி

மத்திய அரசாங்கத்தினால் மாகாண சபைகளிடம் இருந்து பறிக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாக வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் வழங்குவதற்காகச் செயல்படுத்தப்படும் நிபுணர் குழு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி தமது பணிகளை ஆரம்பிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் தலைமையிலான குழுவின ருக்கும் பாராளுமன்ற...

02 பக்கம்

## 13ஐ அகற்றும் சட்டத்தை சபைக்கு கொண்டு வாருங்கள்



### அதன் பின்னரான விளைவுகளை எதிர்கொள்ளுமாறு கெவிந்துவுக்கு மனோ சவால்

02பக்கம்

## ஜனாதிபதி சட்டத்தரணி பதவிக்கு விண்ணப்பம்

### அனுப்பக்கோருகிறார் செயலர்



2022/2023 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சட்டத்தரணிகளைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அரசியலமைப்பின் 33 (ஈ) ஷரத்துக்கமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதோடு, 2021 நவம்பர் மாதம் 24ஆம் திகதி 2255/24 இலக்க விசேட வர்த்தமானி...

02 பக்கம்

## ஐ.எம்.எவ். பிரதிநிதிகள் செப்டெம்பரில் வருகை




இலங்கைக்கு தமது பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் செப்டெம்பர் 14ஆம் திகதி வருகை தரவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவினர் அடுத்த மாதம் 27ஆம் திகதிவரை நாட்டில் தங்கியிருப்பார்கள் எனக் கூறப்படுகின்றது.

இலங்கைக்கு வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் வசதியின் முதலாவது மீளாய்வுக்காக குறித்த குழு வருகை தரவுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## கட்டுப்பாடுகளின் கீழ் வைத்தியர்கள் வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படுவர்



### சுகாதார அமைச்சு அறிவிப்பு

02பக்கம்

## பெருந்தோட்டத்துறையை முன்னேற்ற புதிய திட்டம்

### கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி வலியுறுத்து



தேயிலை உட்பட இலங்கையில் பெருந்தோட்டத் தொழிற்றுறையை முன்னேற்றுவதற்கு புதிய வேலைத்திட்டம் ஒன்று தேவைப்படுவதாகவும் அது நவீன டிஜிட்டல் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய சிறந்த வடிவமைப்பாக இருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

02பக்கம்

## உஷ்



அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு சுகாதார அமைச்சுப் பதவியை வழங்க ஆலோசித்து வருகிறாராம் ஜனாதிபதி.

அப்படி வழங்கினால் அவரோடு நிற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட கைக்குள் போடலாம் என்பது ரணிலின் திட்டம்.

அதேபோல வெளிநாட்டு தூதுவராக பணியாற்றிய மிலிந்தவை தனது அரசியல் பணிகளுக்கு அழைக்கவும் தீர்மானித்துள்ளாராம் ரணில்.

## வறட்சியால் ௦, , பேர் பாதிப்பு



கே. சுபானி

நாட்டில் நிலவும் வறட்சியுடனான காலநிலை காரணமாக 15 மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 83 ஆயிரத்து 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிலவும் கடும் வறட்சியால் நாடளாவிய ரீதியில் சுமார் 50ஆயிரம் வயல்நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள விவசாய அமைச்சு, இதனால் 46ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளது.

02பக்கம்

## மதிவதனி - துவாரகா உயிருடனா?

### மறுக்கிறது பாதுகாப்பு அமைச்சு



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் துணைவியாரான மதிவதனி மற்றும் புதல்வி துவாரகா ஆகியோர் உயிருடன் உள்ளனர் என வெளியிடப்பட்டுள்ள செய்தி நகைப்புக்குரியது என பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கேர்ணல் நளின் ஹேரத் தெரிவித்துள்ளார்.

மதிவதனி மற்றும் மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் இருப்பதாகவும் மிக அண்மையில் இருவரையும் சந்தித்ததாகவும் அவர்களுடன் உணவு உண்டதாகவும் டென்மார்க்கில் வசிக்கும் மதிவதனியின் சகோதரி காணொளி ஒன்றின்மூலம் தெரிவித்திருந்தார்.

02 பக்கம்

## கூட்டமைப்பை திருப்திப்படுத்த இராணுவ முகாம்கள் நீக்கம்

### ஜனாதிபதி ரணில் மீது கம்மன்பில குற்றச்சாட்டு



நா. தினுஷா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள அரசியல்வாதிகளை திருப்திப்படுத்துவதற்காக வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை நீக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சித்து வருகிறார். அவரின் இந்த திட்டத்துக்காக இராணுவத்தின் மீது அழுத்தங்களும் பிரயோகிக்கப்படுகின்றன.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



தேசிய கீதத்தில ஒரு தாய் மக்கள் என்று சொல்லிப்போட்டு இப்ப இந்த நாடு தமிழ் ஆக்களுக்கு சொந்தமில்லையெண்டு சொல்லுறது சரிதானோ ?

## நாடு தமிழர்களுடையதல்ல!...

அவர்களின் உறவினர்களும் இங்கு வந்தார்கள். அவ்வாறு வந்த பெண்கள் அவர்களின் சமய வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக கோவில்களை நிர்மாணித்துக் கொண்டார்கள். அதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. கோவில்களை நாங்கள் ஆதரிக்கிறோம். எங்களின் மக்களும் கோவில்களுக்குச் செல்கிறார்கள்.

விகாரைகள் இருந்த இடங்களிலேயே கோவில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கோவில்களை உடைக்க முடியாது, உடைக்க வேண்டாம், கோவில்கள், பள்ளிகள், தேவாலயங்கள், விகாரைகளுக்கு மதிப்பளிக்கு மாறே நாங்கள் கூறுகிறோம். முஸ்லிம் மக்கள் எமது உறவினர்கள். அவர்களால் இந்த நாடு தொடர்பில் பேசமுடியும்.

பெருந்தோட்ட மக்கள் தோட்டத் தொழில் துறைக்காக அழைத்து வரப்பட்டார்கள். அவர்களினாலேயே இந்த நாடு பாதுகாக்கப்பட்டுள்ளது. எங்களுக்கும் ஒரு பகுதியைத் தாருங்கள், எங்களுக்கு காணியைத் தாருங்கள் என்று அவர்களால் கோர முடியும். அதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதனை நாங்கள் எதிர்க்கவில்லை.

ஆனால், நாட்டைப் பிளவுபடுத்த முடியாது. பெருந்தோட்ட மக்களுக்கான காணிகளை வழங்கவும், சோழர்களுடனும், எல்லாளனுடனும் வந்து இங்கு தலைமறைவாகியிருந்தவர்களுக்கு வடக்கின் ஒரு பகுதியைக் கொடுக்கவும், கிழக்கில் ஒரு பகுதியைக் கொடுக்கவும் கோரிக்கை முன்வைக்க வந்தால் உங்களின் தலைகளை கொய்துகொண்டு களனிக்கு வருவேன் என்றே தெரிவித்தேன். அதற்கு நான் பயமில்லை. எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் முடியும்.

முதலில், விகாரைகளை உடைப்பது மற்றும் பிரித் பாராயணம் செய்யவிடாமை போன்ற காரணங்களுக்காக அவர்களுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யவேண்டும். அரசாங்கம் சமயங்களை வீணடிக்கக்கூடாது. அது, பௌத்தம், முஸ்லிம், கிறிஸ்தவம், இந்து என எந்த சமயமாக இருந்தாலும் பிரச்சினை இல்லை. இவற்றில் பிரதான இடம் பௌத்தத்துக்கே வழங்கப்பட வேண்டும். கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும் பௌத்த தர்மத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். இந்த நற்சான்று எங்களுக்குப் போதும். வேறெதுவும் தேவையில்லை.

அதனால், எனக்கு எதிராக பேசும் ஒவ்வொரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் எதற்காகவும் சோரம்போவார்கள். எனவே, வழக்கு அல்ல, எந்தவொரு விடயமாக இருந்தாலும் அதனை எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன் என்பதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

டயஸ்போராவுக்கு ஏற்றாற்போன்று அரசாங்கம் செயற்படுமாக இருந்தால், மீண்டும் மேர்வின் சில்வா உள்ளிட்ட இந்த நாட்டில் முதுகெலும்பு இருப்பவர்களின் ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகும் என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மனோ கணேசன் எனது நண்பராவார். நட்புக்காக என்னை வந்து சந்திக்கலாம். வழக்கு தாக்கல் செய்துவிட்டுப் பேசலாம். அவர்களுக்கு இங்கு உரிமை இல்லை. குடியுரிமையைத் தவிர வேறு எதுவும் இல்லை. பிரிவுகளைப் பற்றி பேசுவதை விட்டுவிட்டு தமிழ்த் தலைவர்கள் குடியுரிமையை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

கோட்டாவின் கொள்கைப் பிரகடனத்தில 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் உள்ளடக்கப்படவில்லை. எனவே, ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த கொள்கைப் பிரகடனத்தில் அந்த திருத்தத்தை உள்ளடக்க முடியும். இவர்கள் யாரும் சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு குரல்கொடுக்க மாட்டார்கள். தான்தான் ஜனாதிபதியென்ற நிலைப்பாட்டிலேயே ஒவ்வொருவரும் இருக்கிறார்கள். இப்போதுள்ள சகலருக்கும் ஜனாதிபதியாகவேண்டும் என்ற புதிய ஆசையே இருக்கிறது - என்றார்.

## பெருந்தோட்டத்துறையை...

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் (15) பிற்பகல் நடைபெற்ற கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கத்தின் 129ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் பரந்த பங்களிப்பை வழங்குவதற்கு தேயிலை தொழில்துறைக்கு இன்னும் பலம் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அத்துறையில் உள்ள பிரச்சினைகளை அடையாளம் கண்டு, புத்தாக்கத்துடன் அதில் மாற்றத்தை ஏற்படுத்தத் தயாராக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். ஆனால், நமது நாட்டின் பொருளாதாரத்தில் வர்த்தக பற்றாக்குறை ஏற்பட்டால், இந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை 10 ஆண்டுகளுக்கு மேல் முன்னெடுக்க முடியாது. எமக்கு வெளிநாட்டுக் கடன் பெற நேரிடும். பட்ஜெட் பற்றாக்குறை ஏற்படுவதால் அதிக பணம் அச்சிட வேண்டும். மீண்டும் இந்த பழைய முறைமைக்கு செல்வதா அல்லது முறையான பொருளாதார முறைமை மூலம் எழுந்து நிற்பதா என்பதை முடிவுசெய்ய வேண்டும். மேலும் புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும். யுத்த காலத்திலும் எமது நாட்டின் பொருளாதாரம் வலுவாகவே இருந்தது. யுத்த காலத்திலும் நாம் ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்ததை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும், உரிமை மற்றும் ஒழுங்குமுறை ஆகிய இரண்டிலும் அரசாங்கத்தின் ஆதிக்கம் செலுத்தக்கூடிய பொருளாதாரத்தை பராமரிப்பது இன்று கடினமாக உள்ளது. கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் தனியார்மயமாக்கல் ஆகியவை இப்போது நமக்கு இருக்கும் மாற்றுவழிகளாகும்.

தேயிலை உற்பத்தி என்பது அரசாங்க ஆதரவுடன் கட்டமைக்கப்பட்ட தொழில் அல்ல. தனியார் மூலதனத்தைப் பயன்படுத்தி வெற்றி பெற்றவர்களின் தொழில் இது. இதில் சிலர் தோல்வியடைந்தனர். ஆனால், பலர் வெற்றி பெற்றனர். சிலர் விவசாயம் செய்துகொண்டிருந்த காணிகள் கூட சர்ச்சைக்குரிய வகையில் மீண்டும் கைப்பற்றப்பட்டன.

நாம் தற்போது எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தில் பரந்த பங்கை வகிக்கும் பலம் தேயிலைத் தொழிலுக்கு இன்னும் உள்ளது. அடுத்த 20-30 வருடங்களில் கவனம் செலுத்தி இந்தத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை கண்டறிய வேண்டும்.

உலகளாவிய காலநிலை மாற்றத்தால், எதிர்காலத்தில் நாம் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். தேயிலை தொழிலைக் காப்பாற்ற, இந்த மிதமான காலநிலை வலயத்தை, காலநிலை மாற்றத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். சர்வதேச மாநாடுகளில் இது தொடர்பான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளோம். இந்த நிலை உலகின் வடக்கு அரைக்கோளத்தில் ஏற்பட்ட பாரிய தொழில்மயமாதலின் பாதகமான விளைவு என்றும் இதனைக் குறிப்பிடலாம். காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப நாம் மாற வேண்டும். மேலும் நீர் தொடர்பான நிலைமை மிகவும் ஆபத்தானது என்றுதான் சொல்லவேண்டும். காலநிலை மாற்றத்தால் இலங்கையில் பயன்படுத்தக்கூடிய நீர் மூலங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய தகவல்களை அண்மையில் படித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. பெரும்பாலான நீர் மூலங்கள் மத்திய மலைநாட்டில் இருப்பதால், அது நேரடியாக தேயிலை தொழிலை பாதிக்கிறது. இன்னும் 50 முதல் 60 வருடங்களில் நமது சந்தை எங்கே இருக்கும் என்று பார்க்க வேண்டும்.

2050ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகை வளர்ச்சியின் கணிப்புகளைப் பார்க்கும்போது, இந்தியாவின் மக்கள்தொகை மேலும் 400 மில்லியன்களால் அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது. கென்யா, மலாவி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் மக்கள் தொகையும் அதிகரித்து வருகிறது. அதனுடன் இணைந்ததாக அந்த நாடுகளின் தனிநபர் வருமானமும் அதிகரிக்கிறது.

ஆனால், இலங்கையின் சனத்தொகை அதிகரிக்கவில்லை. எனவே, எங்கள் உற்பத்திகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். சீனா திட்டமிட்டு மக்கள் தொகையை கட்டுப்படுத்தி வருகிறது. எதிர்காலத்தில், சீனாவிலிருந்து அதிகமான தேயிலை சந்தைக்கு வரும். இது உங்களுக்கு நல்ல வாய்ப்புகளை உருவாக்கும். மேலும் இந்தியாவும் தேயிலை சந்தைக்கு வருகிறது. எனவே, இந்தியா மற்றும் சீனாவுடன் இது குறித்து கலந்துரையாட வேண்டும். எங்களுக்கு தனியாக பயணிக்க முடியாது. அவர்களின் சந்தைப்போக்கை நீங்கள் கவனமாக நோக்க வேண்டும். உலகின் கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகள் தேயிலையை கொள்வனவு செய்து அதை பால் அல்லது பிஸ்கட்டுடன் சேர்த்துத் தயார்செய்து குடிக்கிறார்கள். இன்று, கிரீன் ரீ உலகில் பிரபலமான பானமாக மாறிவிட்டது. தேயிலை தொடர்பான புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உற்பத்திகள் பற்றி சிந்திக்க வேண்டும்.

சிறுவயதில் எங்கள் வீட்டில் மிகப் பெரிய சமையலறை இருந்தது. ஆனால், இப்போது வீடுகளில் மிகச் சிறிய சமையலறைதான் உள்ளது. அடுத்த 20 முதல் 30 ஆண்டுகளில் சமையலறை இல்லாமல் வீடுகள் கட்டப்படும். அவற்றில் ஓரிரண்டு உணவு பதப்படுத்தும் இயந்திரங்கள் இருக்கும். எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ளவேண்டிய சவால்கள் இவை என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும். அந்தச் சவால்களை நாம் உணர்ந்து அதற்கு ஏற்றவாறு மாற்றுவழிகளுடன் முன்னேற வேண்டும். சுவீடன் நாட்டுப் பொருளாதார நிபுணரான குன்னர் மிர்டலினால் 1960களில் எழுதப்பட்ட Asian Drama என்ற புத்தகத்தில் இலங்கையைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டிருந்தது. ஆங்கிலேயர்கள் தொழில் புரட்சியில் இருந்து நிர்வாகம் மற்றும் நிதி பற்றிய அனுபவத்தைப் பெற்று இந்தியாவிற்கும் இலங்கைக்கும் அதனைக் கொண்டுவந்து பின்னர் அவற்றை பெருந்தோட்டத் துறையில் அறிமுகப்படுத்தினர். எனவே, எமக்கு நவீன தோட்ட முகாமைத்துவ முறைமை கிடைத்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுடன் ஒப்பிடுகையில் புதிய முகாமைத்துவ நடைமுறைகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் இது. இது அனைத்து நவீன டிஜிட்டல் நுட்பங்களையும் உள்ளடக்கிய ஒரு தலைசிறந்த படைப்பாக இருக்க வேண்டும்.

அதில் செயற்கை நுண்ணறிவு, உயிரியல் தொழில்நுட்பம் போன்ற துறைகளையும் பயன்படுத்த முடியுமா என்பது குறித்து ஆராய வேண்டும். இது தனியார் துறையினரால் உருவாக்கப்பட வேண்டும். லிப்டன் இலங்கைக்கு வரவில்லையென்றால் இன்று இவை எதுவும் இருந்திருக்காது. எனவே, அந்த முறைமையை மேம்படுத்துவதன் மூலம் புதிய தயாரிப்புகளை சந்தைக்குக் கொண்டுவருவதற்கான வழிகளை அவசரமாக அடையாளங்காண வேண்டும். அதற்கு உங்களுக்கு முழு ஆதரவை வழங்குவோம். தேயிலை தொழில்துறையின் எதிர்கால வளர்ச்சிக்கு அதுதான் எம்மால் செய்ய முடியும். அதனுடன் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கவும் செயற்பட்டு வருகின்றோம்.

சர்வதேச ரீதியில் இலங்கை தேயிலையை தூய தேயிலையாக கொண்டுசெல்லும் இலக்கை அடைய சிறந்த தீர்வுகளுடன் தொடர்ந்து செல்வதற்கு உங்களை அழைக்கிறேன் - என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## கூட்டமைப்பை...

வடக்கில் இராணுவ முகாம்கள் இருந்தால் மாத்திரமே அந்தப் பிரதேசங்களினூடாக எமது நாட்டுக்குள் வரும் சட்டவிரோத தலையீடுகளை தடுத்து நிறுத்த முடியும். எனவே, அங்குள்ள இராணுவ முகாம்களை நீக்கும் திட்டத்தை ஜனாதிபதி உடனடியாக நிறுத்தவேண்டும் - என்று பிவித்துரு ஹெலஉருமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று (16) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில், வடக்கிலுள்ள இராணுவத்தை நீக்குவது தொடர்பிலும் பேசியிருந்தார். இராணு வத்தினரால் கைப்பற்றப்பட்டிருந்த 26 ஆயிரத்து 812 ஏக்கர் காணிகள், 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் முறையாக தேவையில்லாத 22 ஆயிரத்து 919 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தன. அதாவது, இராணுவம் யுத்தத்துக்காக பயன்படுத்திய காணிகளில் 85 சதவீதம் மக்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இராணுவ முகாமை நடத்துவதற்குத் தேவையான காணி மாத்திரமே இராணுவத்தின் வசமிருந்தது.

இருந்தபோதும், தற்போதைய ஜனாதிபதியின் தலையீட்டில் எதிர்வரும் சில மாதங்களில் மேலும் 377 ஏக்கர் காணிகளை மக்களுக்கு விடுவிக்க இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளது. அவ்வாறாயின் இராணுவத்தினால் விடுவிக்கப்பட்ட காணிகளின் எண்ணிக்கை 87 சதவீதம் வரையில் அதிகரிக்கும். இராணுவத்திடம் 13 சதவீத காணிகள் மாத்திரமே இருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளை திருப்திப்படுத்துவதற்காக தற்போதிருக்கும் இராணுவ முகாமை மேலும் நீக்குமாறு ஜனாதிபதி அச்சுறுத்தியுள்ளார்.

மேலும், விடுவிக்கக்கூடிய காணிகளை அடையாளம் காணுமாறு மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் ஜூலை மாதம் 05ஆம் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் ஜூலை மாதம் 22ஆம் திகதிக்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் அந்தக் குழுவுக்கு ஜனாதிபதியால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அறிக்கையை தயாரிப்பதற்காக 17 நாட்களுக்கும் குறைவான நாட்களே இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனூடாக, வடக்கிலுள்ள இராணுவ முகாமை நீக்குவதற்காக இராணுவத்தினருக்கு ஜனாதிபதி பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளார். விமானப்படை என்பதற்காக எந்நேரமும் அவர்களால் ஆகாயத்தில் இருக்க முடியாது. கடற்படை என்பதற்காக எந்நேரமும் அவர்களால் கடலில் இருக்கவும் முடியாது. அவர்களும் அவர்களின் முகாம்களை தரையிலேயே முன்னெடுத்துச் செல்லவேண்டும். அதற்கு அவர்களுக்கு தரைப் பகுதி அவசியமாக இருக்கிறது.

யுத்தத்துக்கு முன்னரும் வடக்கிலேயே அதிகளவு இராணுவ முகாம்கள் இருந்துள்ளன. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற 21 ஆக்கிரமிப்புகளில் 17 ஆக்கிரமிப்புகள் வழக்கினூடாகவே ஏற்பட்டுள்ளன. சட்டவிரோத தலையீடுகளும் வடமாகாணத்திலேயே இடம்பெறுகின்றன. சட்டவிரோத பொருள் வியாபாரம், போதைப்பொருள் வியாபாரம், பயங்கரவாதம், பிரிவினைவாதம் என்பன அனைத்தும் வழக்கிலிருந்தே தோற்றம் பெற்றன. எனவே, பிரச்சினை இருக்கும் இடங்களிலேயே இராணுவம் இருக்கவேண்டும்.

தமிழ் அரசியல் தலைவர்களே வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை நீக்குமாறு கோருகிறார்களே தவிர, அங்குள்ள மக்கள் கோரவில்லை. அதன் காரணமாகவே, கற்கோவலம் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாமை நீக்க நடவடிக்கை எடுத்தபோது அதனை நீக்க வேண்டாம் என்று அந்த மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர். எனவே, வடக்கு இராணுவ முகாமை நீக்குவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சிகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் - எனறார்.

## வறட்சியால், 1,83,000 பேர்...

அத்தோடு குருணாகல் மாவட்டத்தில் 11ஆயிரத்து 333 விவசாயிகளின் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளதாகவும் விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று (16) வெளியிட்டுள்ள அறிக்கையின்படி,

நாட்டில் நிலவும் கடும் வறட்சியுடனான காலநிலை காரணமாக இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம், குருணாகல், யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா மற்றும் மாத்தளை உள்ளிட்ட 15 மாவட்டங்களில் 54ஆயிரத்து 984 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 83 ஆயிரத்து 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி, அம்பாறை, குருணாகல் மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்கள் நிலவும் கடும் வறட்சியால் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளன.

அதன்படி இரத்தினபுரியில் 14ஆயிரத்து 128 பேரும், அம்பாறையில் 25ஆயிரத்து 891 பேரும், குருணாகலில் 14 ஆயிரத்து 752 பேரும், யாழ்ப்பாணத்தில் 70ஆயிரத்து 238 பேரும் குடிநீர் உள்ளிட்ட வறட்சியின் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர்.

## 13ஐ அகற்றும் சட்டத்தை...

மஹிந்த ராஜபக்ஷ 13 ப்ளஸ் பற்றி பேசினார். இப்போது ரணில் விக்கிரமசிங்க 13 மைனஸ் பற்றி பேசுகிறார். நீங்கள் 13 மைனஸும் கொடுக்க கூடாது என்கிறீர்கள். இதன்மூலம் இந்நாட்டு தமிழருக்கு நீங்கள் தரும் செய்தி என்ன? நீங்கள் கூறுவதை கேட்டுக்கொண்டு, கொடுப்பதை சாப்பிட்டுக்கொண்டு வாயை மூடிக்கொண்டு நாம் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறீர்களா? அது ஒருபோதும் நடக்காது.

அதைவிட 13ஆம் திருத்தத்தை முழுமையாக அகற்றும் திருத்தச் சட்டமூலத்தை உமது கட்சி, பாராளுமன்றத்தில் கொண்டுவரட்டும். அதை பாராளுமன்றம் எப்படி எதிர்கொள்கிறது என்பதை உலகம் அறியட்டும். அதன் பின் வருகின்ற விளைவுகளை நீங்கள் எதிர்கொள்ளுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன், விமல் வீரவங்ச எம்.பி. தலைமையிலான உத்தர லங்கா சபாவ கட்சியின் எம்.பி. கெவிந்து குமாரதுங்கவை நோக்கி கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சியில் நடைபெற்ற சிங்கள மொழி அரசியல் விவாத நிகழ்வில் கலந்துகொண்ட கூட்டணித் தலைவர் மனோ கணேசன், எம்.பிக்களாக விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தலைமையிலான கட்சிகள் கூட்டாக அமைத்துள்ள உத்தர லங்கா சபாகய கட்சியின் எம்பி கெவிந்து குமாரதுங்கவிடம் மேலும் கூறியதாவது;

நான், பிரிபடாத இலங்கைக்குள்ளே நியாயமான தீர்வை தேடுகிறேன். அதுவே எங்கள் தமிழ் முற்போக்கு கூட்டணியின் கொள்கை. நீங்கள் எந்தவொரு தீர்வுக்கும் தயார் இல்லை. அதுதான் உங்கள் கொள்கை. அப்படியானால் உங்களுக்கு நான் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன்.

இந்த ப்ளஸ், மைனஸ் வெட்டிப்பேச்சுகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு, உங்கள் கட்சியின் சார்பாக, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அகற்றும் திருத்தச் சட்டமூலத்தை, பாராளுமன்றத்தில் கொண்டுவாருங்கள். அதை இந்த பாராளுமன்றம் எப்படி எதிர்கொள்கிறது, எம்.பிக்கள் எப்படி வாக்களிப்பார்கள் என நாம் தெரிந்துகொள்ளலாம். உலகமும் தெரிந்துகொள்ளும். அதன் பின் வருகின்ற விளைவுகளை நீங்கள் சந்திக்கலாம்.

உலகம் சொல்வதை கேட்காமல், உலகை ஒதுக்கிவைத்து, சாளரம், கதவுகளை மூடிவைத்து இந்நாட்டை நடத்திய காலம் ஒன்று இருந்தது. அதனால்தான் இன்று இந்நாடு விழுந்துபோய் கிடக்கிறது. ஆகவே, இப்போதும் நீங்கள் திருந்தவில்லை என உலகம் அறியட்டும்.

மஹிந்த ராஜபக்ஷ 13 ப்ளஸ் பற்றி பேசினார். இப்போது ரணில் 13 மைனஸ் பற்றி பேசுகிறார். நீர் 13 மைனஸும் கொடுக்கக்கூடாது என்கிறீர். இதன்மூலம் இந்நாட்டு தமிழருக்கு நீர் தரும் செய்தி என்ன? நீர் கூறுவதை கேட்டுக்கொண்டு, கொடுப்பதை சாப்பிட்டுக்கொண்டு வாயை மூடிக்கொண்டு நாம் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறீரா? அது ஒருபோதும் நடக்காது - என்றார்.

## 13ஆவது திருத்தம்

உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் (15) மாலை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுளள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளதாவது,

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமனதுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், தமிழ்க் கட்சிகளும் தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதிகள் பலர் 13ஐ நடைமுறைப்படுத்தப் போகிறோம் என கூறியிருந்தாலும், நானே தற்போது அதனை நடைமுறைப்படுத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளேன் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர் மாகாண சபைகளிடமிருந்து மத்தியால் பறிக்கப்பட்ட அதிகாரங்கள், மீள மாகாணத்துக்கு வழங்கப்பட்ட பின்னர் தேர்தல் ஒன்றுக்கு செல்லலாம் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள மாகாணங்களுக்கு ஒப்படைப்பது தொடர்பில் நீங்கள் வழங்கிய ஐந்து நிபுணர்களுடன், நானும் சிலருடைய பெயர்களை இணைத்து செப்டெம்பர் முதலாம் திகதியில் பணியை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன் என தெரிவித்துள்ளார்.

மேலும் 13 தொடர்பில் மாகாண ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிபுணத்துவம் வாய்ந்த பிரதிநிதிகளையும் நிபுணர் குழுவுடன் இணைத்து ஆரம்ப நடவடிக்கைகளை முன்னோக்கிக் கொண்டுசெல்லலாம் என ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

குறித்த சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சமன் ஏக்கநாயக்க, சட்டமா அதிபர் சார்பில் பிரதிநிதியும், சி.வி.விக்னேஸ்வரன் சார்பில் வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் செயலாளர் கலாநிதி க.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண முன்னாள் காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி சட்டத்தரணி...

அறிவித்தலுக்கமைய, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரஜைகள் விண்ணப்பிக்கலாம்.

01. இலங்கை உயர் நீதிமன்றத்தின் சிரேஷ்ட சட்டத்தரணியாக இருத்தல்.

02. சட்டத்துறையில் சிறந்த வரவேற்பு மற்றும் தொழில்துறை திறன்களை வெளிக்காட்டியிருத்தல்.

03. இலங்கை சட்டத்தின் முன்னேற்றத்துக்கும் சட்டத்துறையில் நிபுணராகவும் தனித்துவமான மற்றும் சிறந்த பங்களிப்பை வழங்கியிருத்தல்.

04. இலங்கைக்குள் அல்லது வெளிநாட்டில் சட்டம் தொடர்பான சிறப்புத் திறனை வெளிப்படுத்தியிருத்தல்.

05. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பை மீறாமல் நற்பண்பும் நற்பெயரும் கொண்டவராக இருத்தல்.

06. சட்டத்தின் ஆட்சி அல்லது நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதிக்கும் அல்லது மட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு செயலிலும் ஈடுபடாமல் இருத்தல்.

07. உயர் நீதிமன்றத்தினாலோ அல்லது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினாலோ ஒழுக்காற்று உத்தரவுக்கு உட்படுத்தப்படாத ஒரு நபராக இருப்பதுடன், நீதிமன்றத்தினால் தொழில்சார் முறைகேடுகள் அல்லது தவறான நடத்தைகளுக்காக தண்டிக்கப்படாதவராக இருத்தல்.

08. குறைந்தபட்சம் ஐந்து வருட காலத்துக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான வரி செலுத்துபவராக பதிவுசெய்துகொண்டிருத்தல்.

சட்டம் மற்றும் சட்ட அமைப்புகள் பற்றிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை வெளியிட்டிருத்தல், தேசிய அல்லது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் சட்டம் படித்திருத்தல், அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் சட்டம் கற்பித்தல் என்பன ஜனாதிபதி சட்டத்தரணிகளைத் தெரிவு செய்வதற்கான மேலதிக தகைமைகளாக காணப்படும்.

விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் 20 வருடங்கள் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக செயற்பட்டிருத்தல், (விசேட தேவைகளின் போது பதினைந்து (15) வருட சேவை உட்பட ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள், ஜனாதிபதி சட்டத்தரணிகளாக தெரிவுசெய்யப்படுவர்).

விண்ணப்பதாரர் பதிவாளராக (நொத்தாரிசு) இருப்பது தகைமையாக கருதப்படமாட்டாது என்பதோடு, விண்ணப்பதாரரால் மூன்றாம் தரப்பின் ஊடாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் ஜனாதிபதி சட்டத்தரணியாக தெரி செய்யப்படுவதற்கான தகைமையாக கருதப்படாது.

பூர்த்திசெய்யப்பட்ட எழுத்துமூல விண்ணப்பப் படிவங்களை, உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் பிரதிகளுடன் 2023 ஓகஸ்ட் 25 அல்லது அதற்கு முன்னதாக "ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்ப உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல் - 2022 / 2023" என தெளிவாக குறிப்பிட வேண்டும்.

விண்ணப்படிவங்களைத் தரவிறக்கம் செய்துகொள்ள www.presidentsoffice.gov.lk

## கட்டுப்பாடுகளின்...

சில கட்டுப்பாடுகளின் கீழ் வைத்தியர்கள் தனிப்பட்ட தேவைகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அனுமதி வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, விடுமுறைக்கான காரணம், விடுமுறையில் செல்லும் காலப்பகுதி மற்றும் அவ்வாறு விடுமுறை பெற்ற வைத்தியருக்கான மாற்றீடு என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில துறைகளில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்ற வைத்தியர்கள் மீள நாடு திரும்பாமை உள்ளிட்ட காரணங்களால் வைத்தியசாலைகள் சிலவற்றின் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

இந்நிலையில் சுகாதார அமைச்சு புதிய கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது.

அதேநேரம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சுகாதார அமைச்சு மற்றும் ஜனாதிபதி ஆகிய தரப்பினருக்கு இடையே அடுத்த வாரம் கலந்துரையாடல் ஒன்றும் இது தொடர்பில் இடம்பெறவுள்ளது.

## மதிவதனி - துவாரகா

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நளின் ஹேரத், தனது கவனத்தை ஈர்த்துக் கொள்ளும் வகையில் இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாகவும், இதுவொரு போலியான நாடகம் எனவும் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரையும் தான் நேரடியாக சந்தித்ததாக மதிவதனியின் சகோதரி கூறிய கருத்து தமிழ் சமூக வலைத்தள பரப்பில் எதிர்வினைகளையும் பரபரப்பையும் தொடர்ந்தும் உருவாக்கி வருகிறது.

டென்மார்க்கில் வசிக்கும் இவர், ஒரு காணொளிப் பதிவின் ஊடாக இந்தக் கருத்தை வெளிப்படுத்திய நிலையில் இந்தக் காணொளியை மையப்படுத்திய கலவையான எதிர்வினைகள் வெளிப்பட்டுள்ளன.

தனது சகோதரி மதிவதனி மற்றும் பெறாமகள் துவாரகா ஆகியோரை தான் நேரடியாக சந்தித்ததாக இவர் கூறியிருந்தாலும், இந்தச் சந்திப்பு எங்கு இடம்பெற்றது என்ற விடயத்தை இந்தக் காணொளியில் அவர் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக எயார் வைஸ் மார்ஷல் ரொஷான் சேனக்க நேற்று கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

# காணிப் பிரச்சினைகள் தொடர்பில் முல்லைத்தீவில் விசேட கலந்துரையாடல்



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களின் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலுள்ள பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று (16) காலை இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவள திணைக்களம், மகாவலி அதிகார சபை, வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களினால் தமிழ் மக்களுடைய வாழ்வாதாரம் உள்ளிட்ட பூர்வீகக் காணிகள் பறிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் அதற்கான தீர்வுகளை எட்டும் முகமாகவும் இந்த கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் ஜனாதிபதி செயலகத்தினுடைய பிரதிநிதி இளங்கோவன், பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான கு.திலீபன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் உமாமகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் குணபாலன் (காணி), வனவளத்திணைக்களம், மகாவலி அதிகார சபை உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களது தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலை மாணவன் சடலமாக மீட்பு

பல்கலைக்கழக மாணவன் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

களனிப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 23 வயதுடைய மாணவனே நேற்றுமுன் தினம் (15) இரவு சடலமாக மீட்கப்பட் டுள்ளார். கம்பஹா, மீரிகமை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த மாணவன், அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எனினும், மரணத்துக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை என்று இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஹிக்கடுவ கடலில் மூழ்கி கடற்படை அதிகாரி பலி

ஹிக்கடுவ கடற்பரப்பில் உயிர்காக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடற்படை அதிகாரி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் (15) மாலை இடம்பெற்றுள்ளதாக ஹிக்கடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வத்தளை, டிக்கோவிட்ட கடற்படை முகாமில் பணிபுரியும் 32 வயதுடைய கடற்படை அதிகாரி ஒருவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பலபிட்டிய கடற்படை பயிற்சிப் பாடசாலை யானது, 30 கடற்படை அதிகாரிகளுக்கான உயிர்காக்கும் பயிற்சி நெறியை ஹிக்கடுவ பன்னம்கொட பகுதியில் நடத்தியுள்ளதுடன், உயிரிழந்த அதிகாரியும் இதில் பங்குபற்றியுள்ளார்.

மேலும், குறித்த அதிகாரி பயிற்சியின்போது நீரில் மூழ்கி, மீட்கப்பட்டதாகவும் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# திரைப்படத்துறையை விருத்தி செய்வது தொடர்பில் துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடல்



இந்நாட்டின் திரைப்படத்துறையை விருத்தி செய்வது தொடர்பில் ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரை யாடப்பட்டது.

திரைப்படத்துறையில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இந்தக் குழு பாராளுமன்ற உறுப்பினர் லலித் வர்ணகுமார தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் இக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அதற்கமைய, திரைப்படத்துறையில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் தெளிவுபடுத்தினர். விசேடமாக சினிமாத்துறை சுருங்கிவரும் போக்கு தற்பொழுது ஏற்பட்டுள்ளதாகவும் வருடாந்தம் 5 அல்லது 6 திரையரங்குகள் மூடப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், திரைப்படத்துக்கான நுழைவுச் சீட்டினால் திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு கிடைக்கும் நிதியின் பகுதி தொடர்பிலும் திரைப்படத் தயாரிப்பாளர்களைக் கண்டு பிடிப்பதில் காணப்படும் சிரமங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவது தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், வெளிநாட்டுத் திரைப்படங்களைக் கொண்டு வருவதற்கு பதிவுசெய்யும் கட்டணம் மற்றும் ஒரு திரைப்படத்துக்கு திரைப்படக் கூட்டுத்தாபனம் அறவிடும் கட்டணம் திருத்தப்பட வேண்டும் எனவும் இதன்போது பிரேரிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக நெட்ப்ளிக்ஸ் போன்றவை பிரபல்யமடையும் நிலையில், அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கு திரைப்படக் கூட்டுத் தாபனத்திடம் காணப்படும் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், திரைப்படத் தயாரிப்பாளர்கள் தரமான திரைப்படங்களைத் தயாரிப்பதன் அவசியம் குறித்தும் வருகை தந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் களான சஞ்சீவ எதிரிமான்ன, ஜயந்த கெட்ட கொட மற்றும் காமினி வலேபொட ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் ஆடி மாதம் 32ஆம் நாள்
வியாழக்கிழமை

**மேஷம்** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலத்தில் கவனம் வேண்டும்.

**ரிஷபம்** குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள். உணர்வுகளை கட்டுப் படுத்திக் கொள்ளவும்.

**மிதுனம்** உங்களுக்கென எதையாவது இன்று வாங்குவீர்கள். மனத் துணிவுடன் காரியங்களை சாதிப்பீர்கள்.

**கடகம்** குதர்க்கமான பேச்சுகள் வேண்டாம். பணம், பொருள் கைமாறும்போது கவனமாக செயல்படவும்.

**சிம்மம்** நண்பர்கள் சந்திப்பால் நல்லபலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும். தெளிந்த சிந்தனையுடன் சேவையாற்றுவீர்கள்.

**கன்னி** செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் நலக் குறைபாடுகளால் செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்** தொழில், வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப் போனவை திரும்பக் கிடைக்கும். புகழ், செல்வாக்குடன் விளங்குவீர்கள்.

**விருச்சிகம்** புதிய முயற்சிகளில் வெற்றியும் இலாபங்களும் அமையும். யாரையும் நம்பி எதையும் ஒப்படைத்துச் செல்லாதீர்கள்.

**தனுசு** திட்டமிட்ட பிரயாணத்தால் ஓரளவு இலாபம் உண்டு. எதற்கும் அவசரம் வேண்டாம். பொறுமையோடு இருங்கள்.

**மகரம்** தொழில், வியாபாரத்தில் அதிக எரிச்சல், கோபம் அடைவீர் கள். எதற்கும் பொறுமை இழந்து விடாதீர்கள்.

**கும்பம்** காதல், திருமணம் கைகூடிவரும். பங்கு வியாபாரத்தில் வெற்றியுடன் அதிக இலாபம் கிடைக்கும்.

**மீனம்** நினைத்த காரியத்தில் அதிக முயற்சி இல்லாமலேயே வெற்றி. கடன் நிவர்த்தி. எதிரிகள் கட்டுப்படுவார்கள்.

**திதி:** பிரதமை பி.ப.5.35 வரை பின் துவிதியை
**நட்சத்திரம்:** மகம் பி.ப.7.58 வரை பின் பூரம்
**யோகம்:** மரண யோகம் முழுவதும்
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப.11.05 – 12.05 மணிவரை
**ராகுகாலம்:** 1.35 – 3.05 மணிவரை
**எமகண்டம் :** 6.05 - 7.35 மணிவரை
**குளிகை:** 9.05 - 10.35 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிர்ஷ்டம்:** ஆயிலியம், கேட்டை, ரேவதி(பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** சந்திர தரிசனம் - சிம்ம சங்கராந்தி

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# 85 சதவீதமான மாணவர்கள் ஆகக் குறைந்த எழுத்தறிவு நிலைகளையே அடையவில்லை

## கல்வியமைச்சர் சுசில் கவலை



கடந்த 03 வருடங்களில் நீடித்த பாடசாலை மூடல்களால் கல்விக்கு ஏற்பட்ட இடையூறுகளால் தரம் 3இல் கல்வி பயிலும் மாணவர்களில் 85 சதவீதமானவர்கள் ஆகக் குறைந்த எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு நிலைகளை அடையவில்லை என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வியமைச்சின் தலைமையில் சுமார் 800 நிறுவனங்கள் மேற்கொண்ட ஆய்வில் இந்த தகவல் கிடைக்கப் பெற்றதாகத் தெரிவித்த அமைச்சர், ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சியையும் பாலர் பாடசாலைகளை இயக்குபவர்கள் தொடர்பில் கடுமையான அவதானங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

கொழும்பில் புதன்கிழமை(16) இடம்பெற்ற நிகழ்வில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், "கல்வியமைச்சின் தலைமையில் 800 அமைப்புகள் இணைந்து மேற்கொண்ட மதிப்பீட்டுக்கமைய, தரம் 3இல் கல்வி கற்கும் மாணவர்களில் 85 வீதமானவர்கள் ஆகக் குறைந்த எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு நிலைகளை அடையவில்லை. இது அவர்களின் இடைநிலை பாடசாலையின் மாற்றத்துக்கும் அதற்கு அப்பாலான வாழ்க்கை மற்றும் தொழிலுக்கும் இன்றியமையாததாகும்" என்றார்.

" தேசிய வரவு - செலவுத்திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீட்டை குறிப்பாக ஆரம்பத் தரங்களுக்கு அதிகரிக்க வேண்டிய அவசர தேவை காணப்படுகின்றது. சிறுவர்களின் அடிப்படைக் கற்றலை ஊக்குவிக்கும் அதேநேரம், கல்வியில் முக்கிய மறுசீரமைப்புகளை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய திறன்மிக்க மனித வளத்தைக் கட்டியெழுப்ப முடியும்" என கல்வியமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

"கொவிட் பரவலால் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டாலும் பெரும்பாலும் ஆசிரியர்கள் பலர் போராட்டங்களில் ஈடுபட்டு கற்றல் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தினர். இவ்வாறு கற்றல் செயற்பாடுகளுக்கு தடங்கல்களை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

" கற்றல் முறைமை மற்றும் பாடசாலை தரங்களில் முதலில் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. முக்கியமாக ஆரம்பப் பிரிவில் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, "நாடளாவிய ரீதியில் பல பாலர் பாடசாலைகள் காணப்படுகின்றன. அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் எவ்வாறான பயிற்சிகளைப் பெற்று கற்பிக்கின்றார்கள் என்பதை ஆராய வேண்டிய தேவை காணப்படுகின்றது. உயர்தரப் பரீட்சையைவிட 05ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை முக்கியமானதொன்றாக எமது சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்றது. இதனை முற்றிலும் மாற்ற வேண்டும். ஏன் இந்த மாற்றங்களை செய்வதற்கு விடுகிறார்கள் இல்லை. ஆசிரியர் சங்கங்கள் சில அரசியல் கட்சிகளுடன் இணைந்து போராட்டங்களில் ஈடுபட்டு குழப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றார்.

இங்கு உரையாற்றிய யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டின் ஸ்கூக் கூறுகையில்,

"எழுத்தறிவு எண்ணறிவு மற்றும் சமூகப் பொருளாதாரத் திறன்களே சிறுவர்கள் தமக்கான மற்றும் தமது குடும்பங்கள், சமூகங்கள் உள்ளடங்கலாக நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தை வழங்குகின்றன'' என்று குறிப்பிட்டார்.

"நாடு எதிர்கொண்டுள்ள தொடர்ச்சியான இன்னல்களால் கல்வியை இழப்பவர்கள், மெதுவாகக் கற்றுக்கொள்பவர்கள், கல்வியில் பின்தங்கியுள்ள சிறுவர்களின் கற்றல் சாதனையில் விரிவடைந்துவரும் ஏற்றத்தாழ்வுகளை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு செல்லத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள கல்வியமைச்சின் முயற்சிகளைப் பாராட்டுகின்றோம்" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 03 வருடங்களில் நீடித்த பாடசாலை மூடல்கள் மற்றும் அவ்வப்போது கல்விக்கு ஏற்பட்ட இடையூறுகளால் பாதிக்கப்பட்ட நாடு முழுவதிலுமுள்ள 1.6 மில்லியன் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை மீட்பதற்கு உதவி செய்யும் தேசிய முயற்சிக்கு கல்வியமைச்சும் யுனிசெப் நிறுவனமும் தலைமை தாங்குகின்றன.

மொத்த தேசிய உற்பத்தியில் 02 வீதத்துக்கும் குறைவான தொகையையே இலங்கை தற்போது கல்விக்காக ஒதுக்கியுள்ளது. இது கல்விக்கான ஒதுக்கீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 04 முதல் 06 வீதங்களாக இருக்க வேண்டும் என்ற சர்வதேச அளவுகோலுக்கு கீழ் காணப்படுவதுடன் தெற்காசியப் பிராந்தியத்தில் இதுவே மிகவும் குறைவாகவும் காணப்படுகின்றது.

கற்றல் நெருக்கடியானது, பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள சிறுவர்களையும் ஆரம்பத் தரங்களில் உள்ள சிறுவர்களையும் பெருந்தோட்டத்துறையில் உள்ளவர்களையும் பாதித்துள்ளது.

''கற்றல் மீட்பு" தொடர்பில் அபிவிருத்திப் பங்காளர்களின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கில் கல்வியமைச்சு மற்றும் யுனிசெப் ஆகியன கடந்த ஜூலை மாதம் விசேட சந்திப்பொன்றை நடத்தியிருந்ததுடன் குறைபாடுகள் மற்றும் முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கு 09 மாகாணங்களிலும் செயலமர்வுகளை நடத்தின.

இதன் இறுதி நிகழ்வு 16ஆம் திகதி புதன்கிழமை கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றது. கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டியன் ஸ்கூக் மற்றும் அரசாங்க அபிவிருத்திப் பங்காளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# ரூ.2 மில்லியன் பெறுமதிவாய்ந்த கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

கற்பிட்டி பகுதியில் இலங்கை கடற்படை மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது 02 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடல் மார்க்கமாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் கடற்படையினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே சந்தேக நபர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்பிட்டி, சேரக்குளிய முனை களப்பு பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது அதில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7 கிலோ 955 கிராம் நிறையுடைய கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடையவர் என கடற்படையினர் தெரிவித்தனர்.

மேலும், கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 2 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## இரு வேறு குற்றச்சாட்டுகளில் நான்கு பேர் கைது



பு.கஜிந்தன்

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேசிய பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள சுண்டிகுளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் காடழிப்பில் ஈடுபட்ட ஜே.சி.பி. இயந்திரம் ஒன்றும் அனுமதிப்பத்திரம் இன்றி உழவு இயந்திரத்தில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்களும் அதன் சாரதிகள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, நேற்றுமுன்தினம்(15) குறித்த பகுதி சுற்றி வளைக்கப்பட்டது.

குறித்த சந்தேக நபர்கள் நான்கு பேரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 ஒகஸ்ட் 17ஆம் திகதி, வியாழக்கிழமை

# மோடியின் சுதந்திர தின உரை சொல்வதென்ன?

இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினத்தன்று சம்பிரதாயபூர்வ உரையை ஆற்றிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அதில் தனது தொடர்ச்சியான இரண்டு ஆட்சிக்காலத்தை மதிப்பீடு செய்வதாக சுட்டிக்காட்டினார்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள இந்திய பொதுத் தேர்தலுக்கு முந்தைய அவரது இறுதி சுதந்திர தின உரை, கிட்டத்தட்ட ஒரு தேர்தல் பரப்புரையாகவும் மாறிவிட்டது என்று கூறினாலும் மிகையில்லை. எவ்வாறாயினும் பொதுத் தேர்தலில் மூன்றாவது முறையும் வெற்றி பெறுவோம் என்கிற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார். அவர் பொறுப்பேற்ற 2014ஆம் ஆண்டு முதல் நாட்டின் சாதனைகள் மற்றும் முன்முயற்சிகளை பட்டியலிட்ட மோடி, 1947இல் ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்திலிருந்து இந்தியா சுதந்திரம் பெற்றபோதிலும் நாடு நிலையற்றதாகவும் குறிக்கோள் அற்றதாகவும் இருந்ததாகச் சொன்னார்.

அதாவது 2014, நாட்டுக்கு ஒரு புதிய தொடக்கமாக இருந்தது என்பதுதான் அவர் சொல்ல விரும்பிய செய்தி. மக்கள் தொகை, ஜனநாயகம் மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றை நாட்டின் மூன்று முக்கிய வலிமையான அம்சங்கள் என்று குறிப்பிட்ட மோடி, அதற்கு முன்னதாக பல்வேறு தடைகளை வென்ற இளம் தொழில்முனைவோர், விவசாயிகள் மற்றும் விளையாட்டு வீரர்களைப் பாராட்டினார். ஊழல், வாரிசு அரசியல், திருப்திப்படுத்தும் அரசியல் ஆகியவைதான் இந்தியாவின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் மூன்று சவால்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உரை முழுவதும் இந்திய குடிமக்களை "குடும்ப உறுப்பினர்கள்" என்றே அழைத்த மோடி , 2014ஆம் ஆண்டுமுதல் இந்த சவால்களை தான் நேரடியாகக் கையாண்டு வருவதாகவும் அதில் பல எதிரிகளை உருவாக்கிக்கொண்டாலும் பின்வாங்கவில்லை என்றும் சொன்னார். கடந்த காலத்தின் "1000 ஆண்டுகால அடிமைத்தனத்தின்" தீங்குகளிலிருந்து மீண்டு, இந்தியா இப்போது "1000 ஆண்டுகால பொற்காலத்திற்கு" அடித்தளம் அமைத்து வருகிறது என்றார் அவர். வளர்ந்து வரும் புதிய உலக ஒழுங்கில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்று மோடி குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது.

ஒரு பக்கம் இந்தியப் பிரதமரின் உரை நம்பிக்கையூட்டும், ஊக்கமளிக்கும் உரையாக இருந்தது. ஆனால், பிராந்தியங்கள், சமூகங்கள் மற்றும் பாலினங்களைக் கடந்து இந்தியாவின் ஒற்றுமைதான் தனக்கு முக்கியம் என்று மோடி சொன்னாலும், சுய பரிசீலனையோ, ஒருமைப்படுத்தக்கூடியதாகவோ இல்லாமல் பிரத்தியேகமான சுய பாராட்டுரையாகத்தான் அது இருந்தது.

மோடியின் உரையில் திரிபுகள், பொய்கள், மிகைப்படுத்தல்கள் மற்றும் தெளிவற்ற வாக்குறுதிகள் அதிகம் இருந்ததாக பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் சொன்ன நிலையில், 'ஒற்றுமை' என்கிற மோடியின் கோஷம் பெரியளவில் எடுபடவில்லை. தனது சொந்த ஆளுமையை நாட்டுடன் இணைப்பதற்கு பிரதமர் தனது திறமையான பேச்சாற்றலைப் பயன்படுத்தினார் என்று குறிப்பிடலாம்.

கலவரத்தால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் அமைதியும் இயல்பு நிலையும் திரும்பி வருவதாக மோடி சொன்னாலும் வன்முறை மற்றும் பிரச்சினைகளில் மாநிலத்தின் பொறுப்புக்கூறல் பற்றி எதுவும் பேசவில்லை. ஊழலுக்கு எதிரான சமரசமற்ற அறப்போர் பற்றிய மோடியின் கூற்றுகள், பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டணியில் சேரும் வரை எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை மட்டுமே குறிவைக்கும் மத்திய புலனாய்வு அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அணுகுமுறையால் பலவீனமாகவே தெரிகின்றன.

மொத்தத்தில், மோடி அவரது விசுவாசிகளின் நம்பிக்கையையும் அவர் மீது சந்தேகத்தில் இருப்பவர்களின் சந்தேகத்தையும் மேலும் வலுப்படுத்தினார் என்றுதான் கூறவேண்டியுள்ளது.

இந்தியாவில், அடுத்த வருடம் பொதுத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில் பிரதமர் நரேந்திர மோடியின் உரை கடந்த சுதந்திர தினத்தில் பலராலும் ஆர்வமாக நோக்கப்பட்டது. என்றாலும் அது நாட்டுக்கான உரை என்பதைவிட பாரதீய ஜனதா கட்சியின் தம்பட்டம் என்று கவலையுடன் குறிப்பிடவேண்டியுள்ளது.

## இன்றைய நாளில்...

- 1958 – அமெரிக்காவின் சந்திரனைச் சுற்றும் முதலாவது திட்டம் பயனியர் 0 விண்ணுக்கு ஏவப்பட்டு 77 செக்கன்களில் அழிந்தது.
- 1970 – வெனேரா 7 விண்கலம் ஏவப்பட்டது. வேறொரு கோளில் இருந்து (வெள்ளி) வெற்றிகரமாகத் தகவல்களை அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 2005 – பங்களாதேஷின் 64 மாவட்டங்களில் 300 இடங்களில் ஐநூறுக்கும் அதிகமான குண்டுகள் தீவிரவாதிகளினால் வெடிக்க வைக்கப்பட்டன.
- 2008 – அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கல் ஃபெல்ப்ஸ் ஒரே ஒலிம்பிக் போட்டியில் அதிகமான எட்டு தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்தார்.




# மாண்புமிகு மலையக மக்கள்

## நடைபவனியின் பின்னணியில் ஒரு சிந்தனை

பெருமளவுக்கு விளம்பரம் இல்லாமல் இலங்கையின் வடமேற்கு கரையோரத்தில் தலைமன்னாரிலிருந்து தொடங்கிய ஒரு நடைபவனி, மலையகத்தில் மாத்தளையைச் சென்றடைந்திருக்கிறது. இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்வதற்கு தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் 200 வருடங்களுக்கு முன்னர் கடந்துவந்த காட்டுப்பாதையின் தடத்தில் இந்த நடைபவனி இடம்பெற்றது. அந்த நீண்ட பயணத்தின் அடையாளபூர்வமான மீள் அரங்கேற்றம் கடந்த இரு வாரங்களாக நடைபெற்றது.



ஆனால், சிரமம் நிறைந்த நடைபவனியில் சொற்ப எண்ணிக்கையானவர்களே தலைமன்னாரிலிருந்து இறுதியில் மாத்தளை வரை தொடர்ந்து வந்தார்கள். அந்தப் பாதையில் முன்னைய நூற்றாண்டுகளில் பல்லாயிரக்கணக்கானவர்கள் மாண்டுபோனார்கள். தென்னிந்தியாவிலிருந்து குழுக்கள் குழுக்களாக Infrastructure சில குழுக்களில் நாற்பது சதவீதமானவர்கள் இடை வழியில் மரணமடைந்தார்கள்.

நவீன யுகத்தில் அதே மார்க்கத்தில் கடந்த இரு வாரங்களாக நடைபவனியில் வந்தவர்கள் இன்னொரு யுகத்தில் காணாமல்போனோரின் புதைகுழிகளைக் கொண்டிருக்கும் மண்ணையே தங்கள் பாதங்கள் மிதித்துக்கொண்டுவந்தன என்பதை அறிவார்கள். நீண்ட மார்க்கத்தில் பல்வேறு இடங்களில் நடைபவனியில் இணைந்துகொண்டவர்களுக்கு செம்மையாக அமைக்கப்பட்ட வீதிகள், அந்த வீதியோரங்களில் கடைகள், உணவகங்கள் மற்றும் தங்கிச்செல்வதற்கு விடுதிகள் என்று நவீன வசதிகள் எல்லாம் இருந்தன. அவர்களுக்குப் பலரின் ஆதரவும் அனுசரணையும் இருந்தது.

பெருந்தோட்டங்களில் தொடர்ந்து வேலை செய்துகொண்டிருக்கும் மக்களை தற்போதைய பொருளாதார நெருக்கடி, இலங்கைச் சமூகத்தின் வேறெந்தப் பிரிவினரையும் விட படுமோசமாக பாதித்திருக்கிறது. அவர்களுக்கு ஆதரவாகவே நடைபவனி இடம்பெற்றது. ஆயிரம் ரூபா அற்ப வேதனத்துக்கான அவர்களின் போராட்டம் தேசிய பொருளாதாரத்தை கொவிட் பெருந்தொற்று பலவீனப்படுத்துவதற்கு முன்னர் தொடங்கியது.

வைரஸ் பரவுவதைத் தடுக்க அரசாங்கம் ஊரடங்கை பிறப்பித்தபோதிலும் அது விவசாயத்துறைக்கு பிரயோகிக்கப்படவில்லை. தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்துகொண்டேயிருந்தனர். இறுதியில் ஐந்து வருடங்களுக்கும் கூடுதலான காலப் போராட்டத்துக்குப் பிறகு 2021ஆம் ஆண்டில் தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா வேதனத்தைப் பெற்றபோது பணவீக்கத்தால் அதன் உண்மையான பெறுமதி குறைந்துவிட்டது.

அத்துடன், அந்த ஆயிரம் ரூபாவை முழுமையாகப் பெறுவதற்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அதாவது, குறைந்தபட்சம் எத்தனை நாட்களுக்குத் தொழிலாளர்கள் வேலைசெய்தால், குறைந்தபட்சம் எத்தனை கிலோ எடை தேயிலை கொழுந்தை அவர்கள் பறித்தால் அந்த ஆயிரம் ரூபா கிடைக்கும் என்று நிபந்தனைகள் நடைமுறையில் உள்ளன. இத்தகைய நிபந்தனைகளை விதிக்காவிட்டால் தங்களது தொழிற்றுறையை இலாபகரமாக நடத்த முடியாது என்பதே பெருந்தோட்டக் கம்பனிகளின் நிலைப்பாடாக இருக்கிறது.

நீண்டகாலப் போராட்டத்துக்குப் பிறகு தோட்டத் தொழிலாளர்கள் பெற்ற ஆயிரம் ரூபா இன்று 500 ரூபாவுக்கு சமமானதாக வந்துவிட்டது. ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் வேலை செய்தாலும் அந்த ஆயிரம் ரூபாவை வைத்துக்கொண்டு வாழ்க்கையை ஓட்டுவது சாத்தியமில்லை.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட துறையாக பெருந்தோட்டத் துறையே விளங்குகிறது. தோட்டத் தொழிலாளர் சனத்தொகையில் ஐம்பது வீதமானோர் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கிறார்கள் என்று உலக வங்கியின் ஆய்வுகள் கூறுகின்றன.

இத்தகைய விரக்தியான - நம்பிக்கையிழந்த சூழ்நிலையில் தோட்டத் தொழிலாளர்களில் சிலரே நடைபவனியில் கலந்துகொள்ளக்கூடியதாக இருந்தது என்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. குறைந்தபட்சம் குறிப்பிட்ட எண்ணிக்கையான நாட்கள் வேலை செய்தால் மாத்திரமே ஆயிரம் ரூபா கிடைக்கும் என்பதால் அதை இழந்து நடைபவனியில் பங்கேற்க பல தொழிலாளர்களால் இயலாது. இரு வாரகால நடைபவனியில் பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்தை அடையாளபூர்வமாக பிரதிநிதித்துவம் செய்தவர்களில் பலரும் சிவில் சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்களேயாவர்.

மாண்புமிகு மலையக மக்கள் கூட்டமைப்பு என்ற பெயரின்கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்த நடைபவனிக்கு தேசிய கிறிஸ்தவ பேரவை வேறு சிவில் சமூக அமைப்புகளுடன் சேர்ந்து ஆதரவளித்தது.

"நாடு சுதந்திரமடைந்ததற்குப் பிறகு மலையக தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் இலங்கையின் ஏனைய சமூகங்களுக்கு நிகராக முழு அளவிலான குடிமக்களாக தாங்களும் அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் அடங்கும். சமத்துவம், பாரபட்சமின்மை, பாதுகாப்பு, சமூகத்தின் நலன்களையும் அடையாளத்தையும் பேணிப் பாதுகாக்கக்கூடிய அரசியல் மற்றும் நிர்வாக ஏற்பாடுகளை வேண்டிநிற்பதாகவே கோரிக்கைகள் இடையறாது முன்வைக்கப்பட்டுவருகின்றன.

கௌரவம், சுயமரியாதை, சமாதானம் மற்றும் பாதுகாப்புடன் வாழ்வதற்குத் தேவையான குரலையும் அதிகாரத்தையும் சமூகம் கொண்டிருக்கவேண்டும் என்பதற்காகவும் நுவரெலியா மாவட்டத்தில் மிகவும் செறிவாகவும் நாட்டின் ஏனைய பல பாகங்களில் சிதறியும் வாழும் இந்த மக்கள் தங்கள் அலுவல்களை தாங்களே கையாள்வதற்கு வழிவகுப்பதற்காகவுமே இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன'' என்று அந்தக் கூட்டமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உட்பட மலையக தமிழ்ச் சமூகத்தின் தற்போதைய நிலைக்குக் காரணம் அவர்களின் விருப்புக்கு மாறாக பெரும் எண்ணிக்கையானோர் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டமையும் நாடற்றவர்களாக்கப்பட்டதும் குடியுரிமை தொடர்பிலான நிச்சயமற்றதன்மை மற்றும் வாக்குரிமையின்மை ஆகியவையேயாகும். இவை அந்தச் சமூகத்தின் சமூக,பொருளாதார நல்வாழ்வைப் பெரிதும் பாதித்துவிட்டது.

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்ந்துகொண்டு வேலைசெய்யும் மக்களே மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட பிரிவினராவர். அவர்களே நாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக உள்ளனர். ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது பெரும்பாலும் மனித அபிவிருத்திக் குறிகாட்டிகள் சகலதிலும் அவர்கள் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறார்கள். இது அவர்கள் தங்களது பெருந்தோட்ட முதலாளிகளில் தங்கியிருக்கும் தொழிலாளர்கள் என்ற நிலையில் இருந்து ஏனைய சமூகத்தவர்களுடன் சமத்துவமான உரிமைகள் கொண்ட முழுமையான குடிமக்கள் என்ற நிலைக்கு மாறுவதைப் பாரதூரமாக பாதித்திருக்கிறது.

இந்த மண்ணில் வாழும் சகலரும் ஒரு தாயின் மக்கள் என்றே தேசிய கீதம் குறிப்படுகிறது. தேசிய கீதத்தின் சொற்களை நினையாப்பிரகாரம் தவறுதலாக உச்சரித்தால் கூட கடுமையான கண்டனங்கள் கிளம்புகின்றன. அவ்வாறு உச்சரிப்பவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. அந்தளவுக்கு அந்த சொற்கள் மதிக்கப்படுகின்றன. ஆனால், ஒரு சுதந்திர தேசமாக இலங்கை பிறந்த நாளில் இருந்தே தேசிய கீதத்தின் அடிப்படை உணர்வு மீறப்படுகிறது.

தேசத்தின் சிறுவர்களில் ஒரு பிரிவினர் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள். பெரிதாக போற்றப்படும் கன்னங்கராவின் இலவசக்கல்வி கொள்கையில் வறிய தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் உள்வாங்கப்படவில்லை. 1980 வரை அவர்களின் கல்வி தோட்ட முகாமைத்துவத்தின் கைகளில் விடப்பட்டது. தொழிற்சங்கப் போராட்டத்தைத் தொடர்ந்தே அவர்களின் கல்விக்கான வாய்ப்புகளை வழங்க அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக, நாட்டின் வேறு பாகங்களில் உள்ள பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விவாய்ப்புகள் தரங் குறைந்தவையாகவே இன்னமும் உள்ளன. ஆனால், பெருந்தோட்டங்களில் வேலைசெய்யும் தமிழ் மக்கள் எந்தப் பாவத்தையும் செய்யவில்லை.

பதிலாக தோட்டங்களில் மிகவும் இடர்மிகு சூழ்நிலைகளில் கடுமையாக உழைக்கும் அவர்கள், சுதந்திரம் பெற்ற வேளையில் ஆசியாவின் மிகவும் சுபீட்சமிகு நாடுகளில் ஒன்றாக இலங்கையை கட்டியெழுப்பியதில் வெற்றிகண்டார்கள். அதுவே இலவச கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்தவும் உதவியது. வெளியேறிய பிரிட்டிஷார் கிழக்கின் சுவிட்சர்லாந்தாக இலங்கை மாறும் என்று கூறினார்கள். தாங்கள் போற்றிப்பேணுகின்ற விழுமியங்களுக்கு ஏற்றமுறையில் நடந்துகொள்ளத் தவறியமைக்காக பிரிட்டிஷாரும் பொறுப்புக்கூற வைக்கப்படவேண்டும்.

அண்மைய இந்திய வம்சாவழித் தமிழர்கள் குடிமக்களாக நாட்டில் வாழ்வதற்கு இருந்த உரிமையை நிராகரித்ததே சுதந்திர இலங்கையின் அரசாங்கம் 1948ஆம் ஆண்டில் முதலில் எடுத்த தீர்மானங்களில் ஒன்று. அந்த நேரத்தில் அவர்களே நாட்டின் மிகப்பெரிய இனத்துவ சிறுபான்மைச் சனத்தொகையாக இருந்தார்கள். இலங்கைத் தமிழர்களையும் விட அவர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள்.

உண்மையில் கூறுவதானால், பத்து இலட்சத்துக்கும் அதிகமானவர்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் ஏனைய அடிப்படை மனித உரிமைகளையும் நிராகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தில் இலங்கைத் தேசத்தின் சகல பிரிவினரும் உடந்தையாக இருந்தனர். அரசியலமைப்பு அவர்களுக்கு பாதுகாப்பையோ அல்லது சட்டத்தின் ஆட்சியையோ வழங்கவில்லை. பெரிதாகக் கூறப்படும் பிரிட்டிஷ் நீதிமுறை கூட அவர்களுக்கு நீதி வழங்கத் தவறியது.

அன்று நடைமுறையில் இருந்த சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இறுதியாக நாடக்கூடியதாக இருந்த மேன்முறையீட்டு நீதிமன்றமான பிரிவி கவுன்சில் சட்டத்தை நேர்மையாக பிரயோகிக்கத் தவறியது. அந்த நேரத்தில் இலங்கை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு இசைவாக செயற்பட்டுப் பிரிவி கவுன்சில் பிரச்சினையை மழுப்பி அரசியலமைப்பின் 29ஆவது சரத்தின் பிரயோகத்தை நிராகரித்தது.

ஒரு சமூகத்தின் மீது வேறு எந்தவொரு சமூகத்துக்கும் பிரயோகிக்க முடியாத வசதியீனத்தை பிரயோகிப்பதை அந்த 29ஆவது சரத்து தடுத்தது. சர்வதேச சட்டத்தின் பிரகாரம் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான பொறுப்பு சர்வ வியாபகமானதும் தேசிய எல்லைகளை கடந்ததுமாகும்.

மாண்புமிகு மலையக மக்களுக்கான கூட்டமைப்பு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறது.

அவர்களின் வரலாறு, போராட்டம் மற்றும் பங்களிப்பு ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை சமூகத்தின் ஒரு பிரிவினர் என்ற வகையில் ஏனைய பிரதான சமூகங்களுடன் சமத்துவமானவர்களாக தனித்துவமான அடையாளத்துடன் கூடிய சமூகமாக அந்த மக்கள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளும் அவற்றில் அடங்கும்.

தற்போதைய யதார்த்த நிலைவரங்களின் பின்னணியில் நோக்கும்போது இதன் அர்த்தம் ஏனைய சமூகங்களுடன் சமத்துவமானவர்களாக அவர்கள் வாழ்வதை உறுதிப்படுத்துவதற்கு கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பில் நேர்மறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்; ஆட்சிமுறையின் சகல அடுக்குகளிலும் பயனுறுதியுடைய பாத்திரத்தை அவர்கள் வகிக்கக்கூடியதாக அதிகாரம் பகிரப்படவேண்டும்; ஏதோ ஒரு வடிவத்தில் அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்பதேயாகும்.

மாத்தளைக்கு செல்லும் வழியில் வீதியோரங்களில் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. நாவுலவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மலையக தமிழர்கள் நீதிக்கும் இழப்பீட்டுக்கும் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தில் பங்கிற்கும் உரித்துடையா ஒரு சமூகத்தினர் என்ற சிந்தனை வெளிப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. தங்களுக்குத் தேவையானது அனுதாபமோ உதவியோ அல்ல, சமத்துவமான குடிமக்களாக அதாவது, ஒரு சமூகத்துக்கு வழங்கப்படுகின்ற நன்மைகள் இன்னொரு சமூகத்துக்கு மறுக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்யக்கூடியதாக உரிமைகளே தேவை என்று மலையகத் தமிழர்கள் சார்பில் உரையாற்றியவர்கள் வலியுறுத்தினர்.

அரசாங்கத்தின் அண்மைய முன்மொழிவுகளில் ஒன்று தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை (உண்மை ஆணைக்குழு) அமைப்பது தொடர்பிலானதாகும். அதற்காக சட்டவரைவும் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கிறது.

உண்மை ஆணைக்குழுவின் ஆணை குறுகியதாகவே இருக்கிறது. அதாவது 1983 - 2009 காலகட்டத்தில் நாடு அனுபவித்த போரின் ஒரு பகுதியை மாத்திரம் தழுவியதாக ஆணை இருக்கிறது.

கடந்த காலத்தை வெற்றிகொண்டு ஐக்கியமாக முன்னோக்கிச் செல்வதாக இருந்தால் உண்மையைக் கண்டறியும் விடயத்தில் பரந்தளவிலான அணுகுமுறை கடைப்பிடிக்கப்படவேண்டியது அவசியமாகும்.

மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமையையும் வாக்குரிமையையும் நிராகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் நாட்டை இறுதியில் தற்போதைய கவலைக்குரிய நிலைக்கு கொண்டுவந்த பொறுப்புக்கூறும் கடப்பாடு இல்லாத ஆட்சிமுறைக்கான களத்தை அமைத்துக் கொடுத்தது. பரந்தளவில் ஆணையைக்கொண்டதாக உண்மை ஆணைக்குழு விரிவுபடுத்தப்பட்டு தலைமன்னார் தொடக்கம் மாத்தளை வரையிலான மார்க்கத்தில் இடம்பெற்ற மரணங்களின் தடமும் உள்ளடக்கப்பட வேண்டும்.

200 வருடங்களுக்கும் மேலாக அடிமைத் தொழிலாளர்கள் போன்று ஒரு சமூகம் சிறைவைக்கப்பட்டிருக்கும் நிலைவரம், 75 வருடங்களுக்கு முன்னர் அவர்களின் குடியுரிமையை பறிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம், பொறுப்புக்கூறலுக்கான தேவை, இழப்பீடு, காலனித்துவ காலகட்டம் உட்பட கடந்தகாலத் தவறுகளை சீர்செய்வதற்கான நிறுவனரீதியான சீர்திருத்தங்களும் உண்மை ஆணைக்குழுவின் ஆணையில் சேர்க்கப்பட வேண்டும்.



கலாநிதி
ஜெகான் பெரேரா

# தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு முன்னர் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் முன்னேற்றம் குறித்து கோப் குழு பாராட்டு

- ★ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தையை இலக்காகக் கொண்டு இந்த வருடத்தில் 35,000 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்தது
- ★ தொழிற்சந்தைக்கு ஏற்றவாறு புதிய பாடத்திட்டங்களைத் தொடங்குவதற்குப் பரிந்துரை
- ★ ஆலோசகர்களின் சம்பளத்தை அதிகரிக்கவும், அதற்குத் தகுதியானவர்களை ஈர்க்கவும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு





பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார தலைமையில் 2023.08.09 ஆம் திகதி கூடிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (கோப் குழு) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அழைக்கப்பட்டிருந்ததுடன், இதில் 2023 மார்ச் 23 மற்றும் 2023 மே 09ஆம் திகதி நடைபெற்ற கோப் குழுக் கூட்டங்களில் வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுசெய்யப்பட்டன.

கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தலைவர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) பிரசன்ன ரணசிங்க உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பலர் குழு முன்னிலையில் ஆஜராகியிருந்தனர்.

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு கடந்த கோப் கூட்டங்களில் வழங்கப்பட்ட பரிந்துரைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்துக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கோப் குழுவின் தலைவர் வாழ்த்துகளைத் தெரிவித்தார். அதனையடுத்து கீழ்வரும் விடயங்கள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

**அதிகாரசபையின் கூட்டுத் திட்டம்**

அதிகாரசபையின் கூட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்கான பூர்வாங்க செயலமர்வை நடத்தி, 2023-2027ஆம் ஆண்டிற்கான கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியதாக அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார்.

**பணிப்பாளர் நாயகம் உட்பட பிற பதவிகளில் வெற்றிடங்கள்**

அதிகாரசபையில் வெற்றிடமாக உள்ள பணிப்பாளர் நாயகத்தின் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான நேர்காணல் எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ளதாகவும் இங்கு தெரியவந்தது. மேலும், ஆட்சேர்ப்புகளை அங்கீகரிக்கும் அதிகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் எஞ்சியுள்ள 6 முக்கிய வெற்றிடங்கள் மற்றும் இதர வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் எனக் குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

**தொழிற்சந்தையை இலக்குவைத்து மாணவர்களை இணைத்துக்கொள்ளல்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தையை இலக்காகக் கொண்டு இவ்வருடம் 35,000 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகஅதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார். அதை மேம்படுத்துவதற்கான முறையான திட்டத்தை தயார் செய்து ஏற்கனவே திறமையான தொழிலாளர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழை வழங்கவும் பரிந்துரைக்கப்பட்டது.

தென் கொரியா, ஓமான் மற்றும் பிற நாடுகளின் தொழில் தேவைக்கேற்ப பணியாற்றுவதாகவும், தொழில் தேவை அதிகம் உள்ள பகுதிகளில் அதிக கவனம் செலுத்துவதாகவும் அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் தற்போது ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ஏறத்தாழ 2,000 திறமையான பணியாளர்களின் தரவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரியவந்தது.

பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்திக்கொண்ட இளைஞர்களை முறையான தொழில் பயிற்சிக்கு அழைத்துச்செல்ல வேண்டியதன் அவசியத்தைக் குழுவின் தலைவர் வலியுறுத்தினார். கல்வியமைச்சினால் புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான முன்னோடிச் செயற்றிட்டம் அண்மையில் கண்டி தர்மராஜா கல்லூரியில் இடம்பெற்றதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, தொழிற்சந்தைக்கு ஏற்றவாறு புதிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் குழுவில் பரிந்துரைக்கப்பட்டது.

**பாடநெறி பயிற்றுவிப்பாளர்களின் சம்பளம் உள்ளிட்ட பிரச்சினைகள்**

இந்த நிறுவனங்கள் திறைசேரியால் பராமரிக்கப்படுவதற்குப் பதிலாக சுய வருவாய் ஈட்டக்கூடியதாக மாறவேண்டியதன் அவசியத்தை குழு வலியுறுத்தியது. (Fee Levying system) மேலும், ஆலோசகர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள் போதுமானதாக இல்லாததால், ஆலோசகர்கள் சேவையை விட்டு வெளியேறுவது போன்ற பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. அதன்படி, பின்வரும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆலோசகர்களின் சம்பளத்தை அதிகரித்து, அதற்குத் தகுதியானவர்களை ஈர்க்க நடவடிக்கை எடுத்தல், பயிற்றுவிப்பாளர்களின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அதிகாரசபையின் ஊடாகப் பாடநெறிகள் மூலம் சேகரிக்கப்படும் பணத்தைப் பயன்படுத்துதல் (Fee Levying system),

ஆலோசகர்களைப் பயிற்றுவிப்பதற்கும் அவர்களுக்கு சில தொழில்முறைத் தகுதிகளை வழங்குவதற்கும் ஒரு புதிய திட்டத்தை ஆரம்பித்தல். ஆலோசகர்களின் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்தாலோசித்துத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோப் குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, இரான் விக்கிரமரத்ன, ஜகத் குமார சுமித்ராரச்சி, மேஜர் சுதர்சன் தெனிபிட்டிய, ராஜிகா விக்கிரமசிங்க, மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இலங்கை - கியூபா இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வாய்ப்புகள் குறித்து ஆராய்வு





இலங்கை மற்றும் கியூபா இரு நாடுகளுக்கிடையிலான இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து அண்மையில் (09) பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கை - கியூபா பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

நட்புறவுச்சங்கத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இது தொடர்பில் கவனஞ்செலுத்தப்பட்டது. இதன்போது இலங்கைக்கான கியூபா தூதுவர் அண்ட்ரஸ் மார்செலோ கரிடோவும் (Andres Marcelo Garrido) கலந்துகொண்டார்.

இலங்கை மற்றும் கியூபா என்பன நீண்ட காலமாக எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒன்றுக்கொன்று ஆதரவளித்து சர்வதேச ரீதியில் நட்பு நாடுகளாக இருந்து வருவதுடன் இந்தப் போக்கு அதிகரிக்கப்பட வேண்டும் என பேராசிரியர் திஸ்ஸ விதாரண இதன்போது குறிப்பிட்டார். அத்துடன், இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் இலங்கை - கியூபா நட்புறவு அமைப்புகளை ஆரம்பிப்பதன் மூலம் கியூபா பற்றி இலங்கை மக்கள் அறிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். அதற்கமைய, தமது பகுதிகளில் இலங்கை - கியூபா நட்புறவு அமைப்புகளை ஆரம்பிப்பதற்கு முன்வருமாறு பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான கியூபா தூதுவர் அண்ட்ரஸ் மார்செலோ கரிடோ குறிப்பிடுகையில், கியூபா பாராளுமன்றத்தில் அண்மையில் கியூபா - இலங்கை பாராளுமன்ற நட்புறவுச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அங்கத்தவர்கள் இரு நாடுகளுக்குமிடையில் உறவுகளை வலுப்படுத்துவதில் ஆர்வமாக உள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன், கியூபா முகங்கொடுத்த பல்வேறு சவால்களின் போது இலங்கை வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றியும் தெரிவித்தார். அதேபோன்று, இரு நாடுகளுக்குமிடையில் விளையாட்டு மற்றும் வர்த்தகம் போன்ற துறைகளில் இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் நவம்பர் மாத ஆரம்பத்தில் நடைபெறவுள்ள ஹவானா சர்வதேச சந்தையில் இலங்கை வர்த்தகர்களையும் கலந்துகொள்ளுமாறு கியூபா தூதுவர் அழைப்பு விடுத்தார்.

இங்கு உரையாற்றிய இராஜங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் குறிப்பிடுகையில், கியூபா அரசுடன் இணைந்து இலங்கையில் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவித்ததுடன், இதற்கான எண்ணக்கருப்பத்திரம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை நட்புறவுச்சங்கத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நட்புறவுச்சங்கத்தின் உப தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க, நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க மற்றும் இசுறு தொடங்கொட ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் வனவாசலவில் ஒருவர் கைது

ஐஸ் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் கொண்டுசென்றுகொண்டிருந்த சந்தேகநபர், பேலியகொடை வனவாசல பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோகிராம் 06 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

களனி - திப்பிட்டிகொட பகுதியைச் சேர்ந்த 23 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனிடையே, மாளிகாவத்தை ஜும்மா மஸ்ஜித் வீதியில் 10 கிராம் ஹெரோயினுடன் 37 வயதான சந்தேகநபர் ஒருவரும் 06 கிராம் ஹெரோயினுடன் இரத்மலானையில் 48 வயதான ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் அஜித் மெண்டிஸ்



அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக வைத்தியர் அஜித் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.சுகாதார அமைச்சு இந்த நியமனத்தை வழங்கியுள்ளது.

வைத்தியர் அஜித் மெண்டிஸ் இதற்கு முன்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி கௌரவிப்பு விழா





■ பேருவளை பீ.எம்.முக்தார்



பேருவளை சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி கௌரவிப்பு விழா நேற்றுக் காலை 16ஆம் திகதி புதன்கிழமை மு.ப.9.00 மணிக்கு அதிபர் பஹீமா பாயிஸ் தலைமையில் பாடசாலை பாக்கீர் மாக்கார் மண்டபத்தில் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பிரதம அதிதியாகவும் பேருவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.ஜே.யு.சோமரத்ன கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

சீனன் கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்க உறுப்பினர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பாடசாலை பாக்கீர் மாக்கார் மண்டபத்திற்குத் தேவையான 10 லட்சம் ரூபா பெறுமதியான கதிரை தொகுதியையும் இம்தியாஸ் எம்.பி கையளித்தார்.

இவர் இதற்கான நிதியை தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கியிருந்தார்.

பாடசாலை அதிபர் பஹீமா பாயிஸ் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் சேவைகளை கௌரவித்து நினைவுச் சின்னமொன்றையும் இதன்போது கையளித்தார்

# உருகிய இரும்பு திரவம் வெளியேறியதில் காயமடைந்த இந்திய இளைஞன் உயிரிழப்பு

கஹதுடுவ - டயகம வீதியில் உள்ள இரும்புக் கம்பி தயாரிக்கும் தொழிற்சாலைக்குள் இரும்பு உருக்கும் கொதிகலன் குழியில் இருந்து உருகிய இரும்புத் திரவம் வெளியேறியதில் பலத்த காயமடைந்த இந்திய இளைஞன் பத்து நாட்களுக்குப் பின்னர் நேற்று உயிரிழந்துள்ளதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் பீகார் மாநிலம் தாவரிகாநாத்பூரில் வசிக்கும் தீபக் குமார் என்ற 22 வயது இளைஞரே உயிரிழந்துள்ளார்.

களுபோவில போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் ஓகஸ்ட் 5 ஆம் திகதி இரவு வேலைக்காக தொழிற்சாலைக்கு வந்திருந்தார், மேலும் ஆறு இந்தியர்களுடன் சேர்ந்து உலைக்குள் இரும்பை ஊற்றிக்கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக இரும்புத் திரவம் உலையிலிருந்து வெளியேறியதால் அவர்கள் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் முதலில் வேதர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக களுபோவில வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்தின் போது கொதிகலன் குழியில் நான்கில் மூன்று பங்கு இரும்பு போடப்பட்டிருந்ததாகவும், 1,400 பாகை செண்டிகிரேட் வெப்பநிலையில் இரும்பு திரவமாக மாறியதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சூடான இரும்புத் திரவத்தால் அவர்களின் முகம் மற்றும் தலையைத் தவிர உடலின் அனைத்துப் பகுதிகளும் கடுமையாக எரியுண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (16.08.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.1150 | 212.9236 |
| கனேடியன் டொலர் | 231.2956 | 244.0014 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.3073 | 45.4281 |
| யூரோ | 341.5449 | 358.6229 |
| ஜப்பான் யென் | 2.1517 | 2.2597 |
| சிங்கப்பூர் டொலர் | 230.0755 | 242.3951 |
| ஸ்ரேலிங் பவுண் | 397.9843 | 416.9067 |
| சுவிஸ் பிராங்க் | 354.9143 | 375.4932 |
| ஐ.அ. டொலர் | 314.4528 | 327.8235 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851.9600 |
| குவைட் | குவைட் தினார் | 1,043.8441 |
| ஓமான் | ஓமான் றியால் | 834.2673 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.1105 |
| சவுதி அரேபியா | சவுதி அரேபிய றியால் | 85.6298 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.4460 |



வரலாற்றுச் சிறப்புமிக்க முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகை சமேத முன்னைநாதர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் (2023.08.15) முன்னேஸ்வர ஊரவர் மாலை நேர திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.பல பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

படம்: உடப்பு நிருபர்

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.08.15
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5207
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,204,840.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 9 6 5 7 8 5

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3449
சீட்டிழுப்பு திகதி 2023.08.15
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 72,776,924.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 21 23 54 60
விசேட எழுத்து O
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 68875

**Lucky 7**
திகதி 15.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0033
வெற்றி இலக்கினம் தனுசு
L7 இலக்கம் 3 1
வெற்றி இலக்கங்கள் 3 8 6 6 6 9
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,957,841.12

**தன நிதானய**
தேதி 2023/08/15
சீட்டிழுப்பு இலக்கம் 1237
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,209,838.40
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 06 15 39 47
விசேட ஆங்கில எழுத்து Q
Double Chance இலக்கம் 08536

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 516
சீட்டிழுப்பு திகதி 2023-08-15
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,549,035.20
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 11 17 24 30
விசேட இலக்கினம் மேஷம்

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1555
15/08/2023
67519
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 404,267,932.00
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 08
வெற்றி இலக்கங்கள் 35 72 75 76
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# அடுத்த தலைமுறையினருக்கு வரலாற்று பொக்கிஷங்களை கையளிக்க வேண்டும்

## கலாநிதி ஆறு திருமுருகன்



சாவகச்சேரி நிருபர்

அடுத்த தலைமுறையினருக்கு எமது வரலாற்றுப் பொக்கிஷங்களை பாதுகாப்பாக கையளிக்க வேண்டும் என்ற ஒரே ஒரு காரணத்தால் தான் நூல்களை வெளியிட பெருமளவான நிதிகளை செலவிட்டு வருகிறோம் என சிவபூமி அறக்கட்டளை மற்றும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் அண்மையில் இடம்பெற்ற 'கவிஞர் ஔவையின் திருத்தொண்டர் சரிதம்' என்ற கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தால் தேவாரப் புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற ஆவல் பிறந்தபோது சிவத்தமிழ் செல்வியின் பிறந்த தினத்தில் அவர் வாழ்ந்த காலத்தில் முதலாம் திருமுறையை வெளியிட்டோம். அதன் பின்னர் சுந்தரருடைய தேவாரப்பதிகம் அருகி வருகிறது என சிவத்தமிழ் அம்மா கருதியதால் அதனையும் வெளியிட்டோம். அதன் பின்னராக பன்னிரு திருமுறைகளையும் ஆலயத்தில் வெளியிட்டோம். அதில் சேக்கிழாருடைய பெரிய புராணத்தை நான்கு பாகங்களாக அச்சிட்டோம். இதற்கு மொத்தச் செலவு ரூபா 60இலட்சம் வரை ஏற்பட்டது. இந்த முயற்சியை நாட்டில் வேறெந்த ஆலயங்களும் முன்னெடுக்கவில்லை.

துர்க்காதேவி ஆலயத்தால் வெளியிட்ட பன்னிரு திருமுறை நூல்களை விரும்பி வரும் ஆலயங்களுக்கு இலவசமாக வழங்கி அதனை ஆலய வாசலில் அலுமாரி வைத்து காட்சிப்படுத்தக் கோரினோம். ஆனால், நாம் வழங்கிய நூல்கள் பெரும்பாலான ஆலயங்களில் இன்று இல்லை. ஒருசில ஆலயங்களில் இன்றும் வைத்துப் பாதுகாக்கின்றனர்.

தற்போது எமது ஆலயத்தால் கந்தபுராணம் முழுவதுமாக வெளியிடும் முயற்சி இடம்பெறுகின்றது. நாம் பெருமளவு நிதி செலவிட்டு ஏன் இவற்றை செய்கிறோம் என்ற கேள்வி பலருக்கும் ஏற்படக்கூடும். எழுத்தறிவு இல்லாத காலத்தில் கூட பெரியபுராணம், கந்தபுராணம் ஆகியவற்றை கேள்வி ஞானத்தால் கற்று ஆலயங்களில் படித்தோம். இன்று 21ஆம் நூற்றாண்டில் எழுத்தறிவோடு இருக்கும் எமது இளைய தலைமுறைக்கு எமது வரலாற்றை கவனமாக கொடுக்க வேண்டும் என்ற ஆவலால் தான் இவ்வாறு பெரும் நிதிகளை செலவிட்டு வருகிறோம். பலருக்கும் எமது தூரநோக்கு கண்ணுக்குத் தெரிவதில்லை. நாம் செய்யும் செயலில் உள்ள பெறுமதியை சொல்லத் தெரியாத சமூகம் எம் மத்தியில் உள்ளது - என்றார்.

# மேர்வினின் கருத்து கண்டனத்துக்குரியது

## முன்னாள் எம்.பி.சந்திரகுமார்

மு. தமிழ்ச்செல்வன்



மிக மோசமான யுத்தத்தை கடந்து வந்துள்ள நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் தலையில் எதுவுமில்லாதவர்கள் போன்று மேர்வின் சில்வா கருத்துதெரிவித்திருப்பது கண்டனத்துக்குரியதும் கவலைக்குரியதுமாகும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வடக்கில் விகாரைகள் மீதோ அல்லது பிக்குகள் மீதோ கை வைத்தால் தமிழர்களின் தலைகளுடன் களனிக்கு திரும்புவேன் என மக்கள் மத்தியில் வெறுப்பையும் இன குரோதத்தையும் ஏற்படுத்தும் வகையில் அவர் பேசியிருப்பது தலையில் எதுவும் இல்லாதவர்களின் பேச்சு போன்றே அமைந்துள்ளது.

இந்த நாட்டில் இன்னும் நிலையான அமைதி நிலவாமைக்கு ஒவ்வொரு இனத்துக்குள்ளும் மேர்வின் சில்வா போன்றவர்கள் இருப்பதே காரணமாக இருக்கிறது. இவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகள் எனத் தெரிவித்த அவர், ஒவ்வொரு இனத்துக்குள்ளும் இருக்கின்ற மேர்வின் சில்வா போன்றவர்கள் சமூகத்திலிருந்து அகற்றப்பட வேண்டியவர்கள்.

வெறுப்பு பேச்சுகள், அப்பாவி மக்களிடம் இனவாதத்தை தூண்டிவிடுகின்ற செயற்பாடுகள், இந்த நாட்டை ஒருபோதும் நிரந்தர அமைதியை நோக்கிக்கொண்டு செல்லாது. ஆகவே, பொதுமக்கள் மேர்வின் சில்வா போன்றோரின் கருத்துகளுக்கு இடம்கொடுக்காது நிதானமாக சிந்தித்து நாட்டை நிலையான அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் கொண்டுசெல்லும் வகையில் செயற்பட வேண்டும். அனைத்து இனங்களுக்கிடையேயும் நல்லிணக்கமும் சமத்துவமும் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# வறட்சியினால் வவுனியாவில் 1,120பேர் பாதிப்பு

வவுனியா செய்தியாளர்

வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 120 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எம்.ரூவான் ரட்நாயக்கா தெரிவித்துள்ளார்.வவுனியாவில் நிலவும் வறட்சி நிலைமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது வவுனியா மாவட்டத்தில் நிலவுகின்ற வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக இதுவரை 450 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகளவான பாதிப்புகள் உணரப்பட்டுள்ளன.

அந்த வகையில், வெடிவைத்தகல் கிராமத்தில் 450 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 120 பேரும் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, இவர்களுக்கான குடிநீர் இல்லாமல் கஷ்டப்படுவதனால் குடிநீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகளும் தற்போது நடைபெறுகின்றன. விரைவில் அவர்களுக்கான குடிநீர் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

# உணவு பற்றாக்குறையை எதிர்காலத்தில் தீர்க்கலாம்

## இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி நம்பிக்கை

சாவகச்சேரி செய்தியாளர்



விவசாயிகள் கடுமையாக உழைத்தே அறுவடையைப் பெறுகின்றனர். ஜப்பானின் உதவியில் கிடைத்த யூரியா உரம் மூலம் விவசாயிகள் பயனடைய வேண்டும். இதனூடாக எதிர்காலத்தில் நாட்டில் நிலவும் உணவுப் பற்றாக்குறையை தீர்க்க முடியும் என ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி விமலேந்திரசரண் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக சிறு விவசாயிகளுக்கு உரம் வழங்கும் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் அதற்கான தீர்வுகள் தொடர்பிலும் ஆராய்ந்து வருகிறோம். விவசாயி களுக்கு யூரியா உரத்தை வழங்கிய ஜப்பான் அரசு மற்றும் மக்கள், இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஆகியோருக்கு எமது நன்றிகளை தெரிவிக்கின்றேன். இந்த உதவிகள் எதிர்காலத்திலும் தொடரும் என்ற நம்பிக்கையும் உள்ளது.

ஜப்பானின் உதவிகள் விவசாயிகளை உரியமுறையில் சென்றடைவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மற்றும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் முன்னெடுத்து வருகின்றனர். இலங்கை விவசாயிகள் இடர்பாடான காலத்தில் கூட ஓரளவு அறுவடையை பெற்று வருகிறார்கள். அதற்கு ஜப்பான் நாட்டின் இந்த உதவி அறுவடையை மேலும் அதிகரிக்கும் - என்றார்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com



ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக வவுனியா மாவட்டத்தில் சிறியளவில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான இலவச யூரியா உரம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் ஊடாக 09ஆயிரத்து 28 விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கும் நோக்கில் 25 கிலோகிராம் கொண்ட 13 ஆயிரத்து 375 யூரியா பொதிகள் வழங்கப்பட்டன. படம்: பு.கஜிந்தன்

# உணவு ஒவ்வாமையினால் அறுவர் வைத்தியசாலையில்

ராமு தனராஜா

உணவு ஒவ்வாமை காரணமாக சுகயீனமுற்ற பாடசாலை மாணவர்கள் அறுவர் பசறை வைத்தியசாலையில் புதன்கிழமை(16) அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பசறை மீதம்பிட்டி பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 08இல் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மதிய இடைவேளையின் போது குறித்த மாணவர்களில் ஒரு மாணவன் வீட்டிலிருந்து கொண்டுவந்த உணவை ஆறு பேரும் பகிர்ந்துண்டபோது அவர்களுக்கு உணவு ஒவ்வாமை காரணமாக வயிற்று வலி மற்றும் வாந்தி ஏற்பட்டுள்ளன.

இதனைத்தொடர்ந்து குறித்த ஆறு மாணவர்களும் பசறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# தண்ணீர் பவுசர் கையளிப்பு



டி.சந்ரு, செ.திவாகரன்

நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் வாழும் பொதுமக்களின் நலன் கருதி சுத்தமான குடிநீர் வழங்கல் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக தண்ணீர் பவுசர் கையளிக்கும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை(16) இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஒரு கோடியே 35 இலட்சம் ரூபா பெறுமதியான தண்ணீர் பவுசர் ஒன்றை கோயிகா (KOICA) மற்றும் யூ.என்.ஹெபிடாட் (UN - HABITAT) நிறுவனங்கள் ஒன்றிணைந்து உத்தியோகபூர்வமாக கையளித்தன.

இந்நிகழ்வில், கோயிகா நிறுவன பணிப்பாளர் கிம், யூ.என்.ஹெபிடாட் நிறுவன முகாமையாளர் சலிம் கறீம் சாடா மற்றும் இரு நிறுவனங்களின் ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இந்திய சுதந்திரதின நிகழ்வுகள் கண்டியில்




இக்பால் அலி

இந்தியாவின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வு கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் உயர்ஸ்தானிகர் கலாநிதி எஸ்.ஆதிரா தலைமையில் செவ்வாய்க்கிழமை(15) இடம்பெற்றது.

கண்டி லேக் வீதி தர்மதாச வீரவர்தன மாவத்தையில் அமைந்துள்ள உயர் ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார்.

கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாம் செயலாளர் சோமராஜ், கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், தமிழ் வர்த்தக சங்கம், முன்னாள் மத்திய மாகாண சபைத் தலைவர் துரை மதியுகராஜா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பாரத் அருள்சாமி, சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் கைவிடப்பட்டது



ராமு தனராஜா

டெமேரியா A தோட்டத் தொழிலாளர்கள் தோட்டக் காரியாலயத்தை டெமேரியா B தோட்டத்துக்கு மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டம் புதன்கிழமை(16) கைவிடப்பட்டது.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய இரண்டு தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இணைந்து தோட்ட நிர்வாகத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பயனாக, தொழிலாளர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த போராட்டமானது கைவிடப்பட்டது.

டெமேரியா A தோட்ட காரியாலயத்தை இடமாற்றம் செய்யப்போவதில்லை எனவும் கணக்காளர் பிரிவு மாத்திரம் கணக்காளர் இன்மையால் டெமேரியா B தோட்டத்துக்கு மாற்றுவதாகவும் தோட்ட நிர்வாகம் கூறியுள்ளது. அதற்கு இணக்கம் தெரிவித்த தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தை கைவிட்டதாக தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

# கேகாலை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்ட கலந்துரையாடல்



இரத்தினபுரி செய்தியாளர்



கேகாலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் புதன்கிழமை(16) இடம்பெற்றது.

அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவர்களான சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க மற்றும் கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்ரமசிங்க ஆகியோர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கேகாலை மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் மற்றும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் அதற்கான தீர்வுகளும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கலந்துரையாடல் கூட்டத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர் உதயகாந்த குணதிலக்க, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, கேகாலை மாவட்ட செயலாளர் ஆர்.பி.ஜயசிங்க, பிரதேச செயலாளர்கள் உட்பட அரச அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# உழவு இயந்திரம் விபத்து



ராமு தனராஜா

பதுளை, வெவஸ்ஸ தோட்டத்துக்குச் சொந்தமான உழவு இயந்திரம் ஒன்று வீதியை விட்டு விலகி புதன்கிழமை(16) விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் உழவு இயந்திர சாரதி பலத்த காயமடைந்த நிலையில், பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த சாரதி வெவஸ்ஸ தோட்டத்தைச் சேர்ந்த 47 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் உழவு இயந்திரம் வெவஸ்ஸ தோட்டத்துக்குச் சொந்தமானது எனவும் வெவஸ்ஸ தோட்டக் காரியாலயத்தில் இருந்து வெவஸ்ஸ தொழிற்சாலைக்கு சென்று கொண்டிருந்தபோது பதுளை - பசறை வீதி 7ஆம் கட்டைப் பகுதியில் வைத்து வீதியை விட்டு விலகி 60 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பேராதனை பல்கலைக்கழகத்தில் 'மலையகம் 200' ஆய்வு மாநாடு



இக்பால் அலி

பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறையின் ஏற்பாட்டில் மலையகம் 200 ஆய்வு மாநாடு பல்கலைக்கழக கலைபீடக் கருத்தரங்கு மண்டபத்தில் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல்துறைப் பேராசிரியர் ச.விஜேசந்திரனும் சிறப்பு விருந்தினராக நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய அறங்காவலர் முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மலையகம் 200 ஆய்வு மாநாட்டின் முதல் அமர்வு கோ.நடேசையர் மீனாட்சியம்மாள் அரங்கில் பேராசிரியர் எம்.ஏ. நுஹ்மான் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஆர். மகேஸ்வரன், பிரபல எழுத்தாளரும் ஆய்வாளருமான ரா.நித்தியானந்தன், ஆய்வாளர் எல்.ஜோதிகுமார், எழுத்தாளர் மு.சிவலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

சி.வி.வேலுப்பிள்ளை அரங்கில் பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி சோதிமலர் ரவீந்திரன் தலைமையில் ஆய்வாளர் ந. சரவணன், கல்வியமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள மேலதிக ஆணையாளர் நாயகம் கவிஞர் சு.முரளிதரன், ஆய்வாளர் மல்லிகைப்பூச் சந்தி திலகர் ஆய்வாளர் மு.காளிதாஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

பேராசிரியர் அருணாசலம் அரங்கு, சாரல் நாடன் அரங்கு போன்ற பெயர்களில் ஆய்வாளர்கள் மலையகம் குறித்த பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தார்கள். இதன்போது சு.தவச்செல்வன் எழுதிய "இரு வருடகால மலையகமும் இலக்கியமும் ஒரு காலக் கணக்கெடுப்பு" எனும் நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெற்றது. இதில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், எழுத்தாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



**அகில இலங்கை வலய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டியில் கம்மடுவை தமிழ் மகா வித்தியாலயம் திறந்த போட்டிப் பிரிவு நாட்டார் பாடலில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இந்தப் போட்டியில் தரம் 11இல் கல்வி பயிலும் மாணவர்களான பிரதிக்ஷன், கிஷானி, பபிலாஷினி, விஜேன்தனி, ராஜேஸ்வரி, ரம்யா பகீர்தனி ஆகியோர் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தனர். முழுமையாக கம்மடுவை மக்களின் வாழ்வியலை மையமாகக்கொண்டு காணப்பட்ட இந்த நாட்டார் பாடலை பாடசாலை தமிழ்ப்பாட ஆசிரியர் ஜயகுமார் ஷான் பயிற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.**

# உலக செய்திகள்

## ஹவாய் காட்டுத் தீயில் சிக்கி 106 பேர் பலி; 1,300 பேர் மாயம்



அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்திலுள்ள மாவி தீவில் காட்டுத் தீ ஏற்பட்ட பகுதிகளில் 1,300இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ள நிலையில் காட்டுத் தீயில் சிக்கி 106இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். மீட்புப் பணிகள் தொடரும் நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

ஹவாய் மாகாணம், மாவி தீவில் திடீரென காட்டுத் தீ மிக வேகமாகப் பரவியது. வட சூழல், காற்றில் குறைவான ஈரப்பதம், வேகமான காற்று ஆகிய மூன்றும் சேர்ந்து காட்டுத் தீயை வேகமாகப் பரவச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில், 1,700களில் உருவாக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாத் தலமான லஹோனா நகரம் நகரம் முற்றிலும் உருக்குலைந்துள்ளது. ஏராளமானோர் உடல் கருகி உயிரிழந்தனர். பலர் தீக்காயமடைந்தனர். சிலருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதாகவும் தகவல். அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்தும் அந்நகரில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

காட்டுத் தீயில் 271 கட்டுமானங்கள், 19,000 வீடுகள், கடைகள், பிற கட்டடங்கள் சேதமடைந்ததாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் தீவிலிருந்து வெளியேறி வருகின்றனர். 1960களில் ஏற்பட்ட சுனாமிக்குப் பிறகு ஹவாய் தீவுகளில் ஏற்பட்ட மிகப்பெரிய பேரழிவாக இந்த காட்டுத் தீ கருதப்படுகிறது.

## இமாச்சலை உலுக்கும் மண்சரிவு



### சீட்டுக்கட்டுகளைப்போல் சரிந்த கட்டடங்கள்

### 60 பேர் உயிரிழப்பு; 9,600 வீடுகள் சேதம்





இமாச்சலப் பிரதேசத்தில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்ட மண்சரிவில் சீட்டுக்கட்டுகளைப்போல் கட்டடங்கள் பல சரிந்து மண்ணில் புதையுண்டுள்ளன. இந்நிலையில், இடிபாடுகளில் சிக்கி 60இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 150இற்கும் மேற்பட்டோர் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. 650இற்கும் மேற்பட்டோர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

டில்லியில் வரலாறு காணாத கடும் மழை பெய்துவருகிறது. இமாச்சலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, பீஹார் எனப் பல மாநிலங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன.

இந்நிலையில், இமாச்சலப் பிரதேசத்தில் பெய்துவரும் கடும் மழையால் அங்கு பாரிய மண்சரிவு ஏற்பட்டு குடியிருப்புகள் பல மண்ணில் புதையுண்டன.

ஹிமாச்சலின் சிம்லா, மண்டி மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 60இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், சிம்லா, மண்டி பகுதிகளிலுள்ள வீடுகள் மற்றும் அடுக்குமாடிக் கட்டடங்கள் சரிந்து விழுந்து தண்ணீரில் அடித்துச் செல்லும் காட்சி மக்களை கலக்கமடைய வைத்துள்ளது.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர், மாநில பேரிடர் மீட்புப் படையினர், இராணுவ வீரர்கள் உள்ளிட்டோர் மண்சரிவில் காணாமல் போனவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**170 மேக வெடிப்புகள்**

இமாச்சலப் பிரதேசத்தில் பருவமழை தொடங்கியதிலிருந்து இதுவரை 170 மேகவெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. தொடர் மண்சரிவுகளால் 9,600இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

## அபாய கட்டத்தில் புவி வெப்பநிலை

கடந்த 140 ஆண்டுகளாக இல்லாதளவுக்கு இந்தாண்டு ஜூலை மாதத்தில் அதிக புவி வெப்பம் பதிவாகியுள்ளதென நாசா அறிவித்துள்ளது.

அத்துடன், புவி வெப்பமடைதலை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் உலக நாடுகளை நாசா வலியுறுத்தியுள்ளது.

## நிலவை நெருங்கிய சந்திரயான் - 3




நிலவின் சுற்றுவட்டப் பாதையில் பயணித்துவரும் சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவை குறைக்கும் இறுதிக்கட்ட முயற்சியை இஸ்ரோ வெற்றிகரமாக மேற்கொண்டது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக கடந்த மாதம் 14ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்ட சந்திரயான்-3 விண்கலம், கடந்த 5ஆம் திகதி நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் உந்தித் தள்ளப்பட்டது. தொடர்ந்து கடந்த 7, 9, 14 ஆகிய திகதிகளில் சந்திரயான்-3 விண்கலத்தின் நிலவு சுற்றுப்பாதையின் தொலைவு 3 கட்டங்களாக குறைக்கப்பட்டது.

இந்நிலையில், நான்காவது மற்றும் இறுதிக்கட்டமாக விண்கலத்தின் நிலவு சுற்றுப்பாதை உயரம் நேற்று (16) காலை 8.30 மணிக்கு வெற்றிகரமாக குறைக்கப்பட்டது. எதிர்வரும் 23ஆம் திகதி நிலவின் மேற்பரப்பில் சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர் கருவியை தரையிறக்க இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

## தொழில்நுட்பக் கோளாறால் வங்கிக் கணக்கில் குவிந்த பணம்

### ஏரிஎம் மையங்களை முகாமிட்ட மக்கள்




அயர்லாந்திலுள்ள 'பேங்க் ஒவ் அயர்லாந்து' என்ற தனியார் வங்கியின் செயலியில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால் வங்கிக்கணக்கில் குறைவான தொகை வைத்திருந்தவர்களின் கணக்கில் 1000 யூரோக்கள் செலுத்தப்பட்டுள்ளது. இதன் இலங்கை மதிப்பு 3,52,045 ரூபாவாகும். இது தொடர்பான தகவல் அந்நாடு முழுவதும் தீப்போல பரவியடுத்து குறித்த வங்கியில் கணக்கு வைத்திருந்த ஏராளமானோர் ஏரிஎம் மையங்களில் குவிந்தனர்.

மேலும் அந்தப் பணத்தைக் கையில் வைத்திருந்தால் திரும்பி பெற்றுவிடுவார்களோ என்று அஞ்சி உடனடியாக அதை வைத்து ரிவி, ப்ரிட்ஜ் என வாங்கவும் கடைகளில் கூட்டம் அலைமோதியது. ஏரிஎம் வாசல்களில் கூட்டம் கூடியதால் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். இது குறித்து விளக்கமளித்துள்ள அந்த வங்கி, தொழில்நுட்பக் கோளாறை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது. மேலும் பணம் எடுத்தவர்களின் கணக்கிலிருந்து அந்தத் தொகை பிரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**இந்திய முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் 5ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று (16) அனுஷ்டிக்கப்பட்டது. இதனையொட்டி டில்லியிலுள்ள வாஜ்பாய் நினைவிடமான சதைவ் அடலில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் மோடி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதன்போது தேசத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்லவும், பல்வேறு துறைகளில் நாட்டை 21ஆம் நூற்றாண்டுக்கு நகர்த்திச் செல்லவும் வாஜ்பாய் முக்கிய பங்காற்றியதாக பிரதமர் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.**



**இந்துக்களால் முன்னோர்களை நினைவுகூரும் ஆடி அமாவாசை தினம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (15) அனுஷ்டிக்கப்பட்டது.**

**செவ்வாய் அதிகாலை சிலாபம் தெதுறுஓயா (மாயவனாறு) நதிக்கரையில் ஸ்ரீ முன்னேஸ்வரம் ஆலய குருக்கள் பிரம்மஸ்ரீ முரளிதரன் குருக்களினால் இந்த பிதிர்க்கடன் சாந்திக்கிரியை நடத்தப்பட்டது.**

**இந்த பிதிர்க்கடன் அனுஷ்டானத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு மாயவனாற்றில் நீராடிய பின்னர் பிதிர்க்கடனை நிறைவேற்றினார்கள்.** **- உடப்பு நிருபர் -**

## குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 54 இலங்கையர்கள் நாடு திரும்பினர்



குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 54 இலங்கையர்கள் நேற்று புதன்கிழமை காலை (16) நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கைக்கு வர முடியாமல் விசா இன்றி குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்தவர்களே இவ்வாறு குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தின் தலையீட்டால் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவில் 53 வீட்டுப் பணிப்பெண்களும் ஒரு வீட்டுப் பணியாளரும் அடங்குவர். இவ்வாறு வருகை தந்தவர்களில் பெரும்பாலோர் அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், ஏனையவர்கள் பொலன்னறுவை, மொனராகலை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வருகை தந்தவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வழங்கிய கட்டணத்தை பெற்றுக்கொண்டு தமது ஊர்களுக்கு புறப்பட்டனர்.

## க.பொ.த. சாதாரண தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி 18இல் ஆரம்பம்!

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் முதற்கட்ட மதிப்பீட்டுப் பணிகள் நாளை 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் எதிர்வரும் 27ஆம் திகதிவரை நாடளாவிய ரீதியில் 100 மதிப்பீட்டு நிலையங்களில் இடம்பெறவுள்ளதாக பிரதி பரீட்சைகள் ஆணையாளர் லசிக சமரகோன் குறிப்பிட்டார்.

"இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஓகஸ்ட் 27ஆம் திகதிவரை இடம்பெறும். இந்தப் பரீட்சைக்காக 4,72,554 தேர்வாளர்கள் விண்ணப்பித்திருந்தனர். அந்தத் தேர்வாளர்களின் சுமார் 2.6 மில்லியன் விடைத்தாள்கள், அதாவது கிட்டத்தட்ட 90%, இந்தக் கட்டத்தில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. 27,500 ஆசிரியர்கள் இதற்கான பணிகளில் ஈடுபடவுள்ளனர். பாடசாலை விடுமுறை நாட்களில் இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் நடைபெறும். எனவே, மதிப்பீட்டு நடவடிக்கைகள் காரணமாக எந்தப் பாடசாலையும் மேலதிகமாக மூடப்படாது. அதன்படி, 56 நகரங்களிலுள்ள 100 மதிப்பீட்டு நிலையங்களில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன" - என்றார்.

## மரம் முறிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழப்பு

மரம் முறிந்து விழுந்ததன் காரணமாக தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் தலைமை பாதுகாப்பு உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார்.

தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்குள் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மரம் முறிந்து மின்சாரத் தூண்மீது விழுந்து பின்னர் அது பாதுகாப்பு உத்தியோகத்தரின் மீது சரிந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக 54 வயது உபுல் உயிரிழந்துள்ளார். மிருகக்காட்சிச் சாலைக்குள் விலங்குகள் வைத்தியசாலை முன்பாக உள்ள மரமே முறிந்து விழுந்துள்ளது.

## சீனன்கோட்டை பவுண்டேசனின் சான்றிதழ் வழங்கும் வைபவம்






(அஷ்ரப் ஏ சமத்)

பேருவளை சீனன்கோட்டை பவுண்டேசன் 2010ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கடந்த 13 வருட காலத்தில் இப்பிரதேச வாழ் பாடசாலை விட்டு விலகிய யுவதிகளுக்கு சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு பல்வேறு திட்டங்களை வகுத்து வருகின்றது.

அந்த வகையில் கடந்த சனிக்கிழமை சுயதொழில் கற்கைநெறியான தையல் பயிற்சிநெறியை வெற்றிகரமாக முடித்த 110 யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் அவர்களது உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தும் வைபவமும் பேருவளை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு காலை அமர்வை முன்னாள் உப அதிபர் ஜனாபா மிஸ்பா ஷம்ஸுதீன் அன்சார் திறந்து வைத்தார்.

பிற்பகல் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் பவுண்டேசனின் தலைவர் பஸால் ஷரீப், தலைமையில் நடைபெற்றன.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷாமிலா தாவூத், கௌரவ அதிதியாக முஸ்லிம் சேவைப் பிரதி பணிப்பாளர் பாத்திமா ரினுசியா, பேருவளை சீனன்கோட்டை பவுண்டேசனின் செயலாளர் அஷ்ஷேக் அரபாத் கரீம் (நளீமி) மற்றும் போதனாசிரியை கலீமா மிஹ்ரூன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். அத்துடன் மாணவிகளது திறமைகளை வெளிக்கொணரும் கவிதைகள், வரவேற்புப் பாடல்கள், பேச்சுகள் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.


தற்போது விற்பனையில்!

ஜீனியர் வழங்கும் தமிழன்

2023ஆம் ஆண்டுக்கான
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை
'வெற்றிக்கு வழிவகுக்கும்'
விசேட மாதிரி வினாத்தாள் பொதி




பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது

பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308 / 0741684643






கிழக்கிலங்கையின் வரலாற்றுச்சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் நேற்று (16) இடம்பெற்றது. எருது வாகனத்தில் பார்வதியுடன் சிவன் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் உள்வீதியுலா வந்து தீர்த்தக்கரையை அடைந்து மாமாங்கேஸ்வரப்பெருமானுக்கு தீர்த்தக்கேணியில் விசேட பூஜையும் இடம்பெற்றது.

**படங்கள்:** மட்டக்களப்பு நிருபர்கள்

# பள்ளக்காட்டுப் பிரதேசத்துக்கு குப்பைகளை உண்ணச் செல்லும் யானைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

பாறுக் ஷிஹான்

பள்ளக்காட்டுப் பகுதிக்கு குப்பைகளை உண்ணச் செல்கின்ற யானைகள் அருகிலுள்ள விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகளையும் அச்சுறுத்தி வருகின்றன.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட அஷ்ரப் நகர் பள்ளக்காட்டுப் பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளை உண்ணுவதற்காக தினந்தோறும் 100 இற்கும் மேற்பட்ட யானைகள் செல்கின்றன.

இவ்வாறு அந்தப் பிரதேசத்துக்குள் புகும் யானைகள், அருகிலுள்ள பொதுமக்களின் உடமைகளுக்கு சேதம் விளைவிப்பதுடன் விவசாய நிலங்களையும் சேதப்படுத்துவதாக மக்கள் தெரிவிக்கிறார்கள்.

காரைதீவு, கல்முனை, அக்கரைப்பற்று, நிந்தவூர் உள்ளிட்ட பிரதேசங்களில் இருந்து குப்பைகள் வாகனங்கள் மூலம் கொண்டுசெல்லப்பட்டு மேற்படி பகுதியில் தினமும் கொட்டப்படுகின்றன.

இதனால் மலைபோல் குவிந்துள்ள குறித்த குப்பைகளை தினமும் யானைகள் உண்ணச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், அம்பாறைப் பிராந்தியத்தில் அன்றாடம் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளில் அநேகமானவை மேற்குறித்த இடத்திற்கே கொண்டுசென்று கொட்டப்பட்டு வருகின்றன.




மேலும் கடந்த காலங்களில் இப்பகுதியில் பிளாஸ்ரிக் குப்பைகளை உட்கொண்ட இரண்டு யானைகள் உயிரிழந்திருந்தன.

குப்பைகளிலுள்ள பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருட்களை உண்டு கடந்த 8 ஆண்டுகளில் 20 யானைகள் உயிரிழந்துள்ளதுடன், கிழக்கு மாகாணத்தில் திறந்தவெளி குப்பைக் கிடங்கில் பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள் தேங்குவதால் அப்பகுதியில் அதிகளவில் யானைகள் உயிரிழப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்த யானைகளை பரிசோதித்த போது குப்பை மேட்டில் இருந்து பெருமளவிலான அழியாத பிளாஸ்ரிக் பொருட்களை விழுங்கியுள்ளதாகவும் யானைகள் சாப்பிட்டு ஜீரணிக்கும் சாதாரண உணவு எதுவும் அங்கு தெளிவாகத் தெரியவில்லை எனவும் வனவிலங்கு கால்நடை மருத்துவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் செயலாளர் மீது தாக்குதல்

பாறுக் ஷிஹான்

ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத்தின் மகனும் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் செயலாளருமான ஷாஹிட் முபாறக் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புற நகர்ப் பகுதியில் திங்கட்கிழமை(14) இரவு தனது வாகனத்தில் மனைவியுடன் சென்று கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ஷாஹிட் முபாறக் மீது இனந்தெரியாத இருவர் தாக்குதல் மேற்கொண்டு தலைமறைவாகியுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளான ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் செயலாளர் தற்போது கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்திலும் குறித்த சம்பவம் தொடர்பில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் கல்முனை தலைமையகப் பொலிஸார் துரித விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்ளூராட்சி மன்ற சேவை நவீனமயமாக்கல் தொடர்பில் இளைஞர்களுக்கான செயலமர்வு



மாளிகைக்காடு நிருபர்

ஆசிய மன்ற நியுதவியின் கீழ் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற "உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளினூடாக இளைஞர்களை வலுவூட்டும் செயற்றிட்டத்தின்" கீழ் இளைஞர்களைத் தெளிவூட்டும் பயிற்சிச் செயலமர்வு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபை பிரதம முகாமைத்துவ உதவியாளர் என். சிவகுமார் தலைமையில் நேற்று முன்தினம் (15) நடைபெற்றது.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன பிரதம நிறைவேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகரவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன பிரதம செயற்பாட்டு அதிகாரி கலன வீரசிங்கவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த இளைஞர்களைத் தெளிவூட்டும் பயிற்சிச் செயலமர்வின் பிரதான வளவாளராக உள்ளூராட்சி மன்றங்களின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் எம்.ஐ.எம். வலீத் கலந்துகொண்டு உள்ளூராட்சி மன்றங்களின் தொழிற்பாடு, செயற்பாடு, உப சட்ட விதிகள், நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளித்தார்.

# மாமாங்கேஸ்வரர் ஆலய- மரியாள் தேவாலய திருவிழாக்களில் தங்கச் சங்கிலிகள் கொள்ளை

## 9 சந்தேக நபர்கள் கைது: 22 பவுண் ஆபரணங்கள் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் மரியாள் தேவாலய திருவிழாக்களின்போது இடம்பெற்ற தங்கச் சங்கிலி அறுத்தெடுக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் வெவ்வேறு பிரதேசங்களில் பெண்களின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலிகளை அறுத்துச் சென்ற சம்வங்கள் என்பவற்றுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 09 பேர் நேற்று முன்தினம் (15) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளையிட்ட - பெண்கள் அடங்கிய கொள்ளைக்குழுவைச் சேர்ந்த 4 பெண்களையும் மற்றும் ஆலயத்தில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய பெண்கள் உட்பட 9 பேருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது ஒரு பெண் தப்பி ஓடியுள்ளதாகவும் ஆலயத்தில் 5 பேரின் 19 பவுண் தங்கச் சங்கிலிகள் காணாமல் போயுள்ளதாகவும் மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நகர் மத்திய வீதியிலுள்ள மரியாள் தேவாலய வருடாந்த திருவிழாவின் இறுதி நாளான நேற்று முன்தினம் (15) காலை 9 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுத்து ஆராதனை இடம்பெற்று திருவிழா முடிவுற்ற பின்னர் தேவாலய பகுதியில் தானமாக கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இதன்போது அங்கிருந்த பெண்ணொருவரின் கழுத்திலிருந்த இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலி 4 பேர் கொண்ட பெண்கள் குழுவைச் சேர்ந்த ஒருவரால் அறுத்தெடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்த பெண் கொள்ளைக்குழுவைச் சேர்ந்த மற்றைய 3 பெண்களையும் அங்கிருந்த மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர். இதன்போது ஒருவர் தப்பியோடியுள்ளார். அதனைத் தொடர்ந்து மடக்கிப் பிடித்த பெண் கொள்ளையர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கொழும்பு, வத்தளை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய யுவதி ஒருவர் உட்பட 27 மற்றும் 33 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாமாங்கேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழாவில் தேர் இழுக்கும்போது, அங்கிருந்த மூதாட்டியொருவரின் கழுத்தில் இருந்த முக்கால் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்த புத்தளம் பகுதியைச் சோந்த 45 வயதுடைய பெண் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன் இவர் ஏற்கனவே களுவாஞ்சிக்குடி மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது

இவ்விரு வெவ்வேறு சம்பவங்களில் 4 பெண்களும் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய திருக்கோவில் காஞ்சிரங்குடாவைச் சேர்ந்த 2 பெண்கள், ஒரு ஆண் மற்றும் வவுனியா மற்றும் கொழும்பு பகுதியைச் சேர்ந்த 2 இளைஞர்கள் உட்பட 5 பேரையுமே கைதுசெய்துள்ளனர்.

அதேவேளை, ஆலய தேர்த்திருவிழாவில் பிரபல வர்த்தகர் ஒருவரின் 7 பவுண் தங்கசங்கிலி மற்றும் 4 பெண்களுடைய 18 பவுண் தங்கச் சங்கிலிகள் என காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





**கல்முனையில் கடந்த 18 வருடங்களுக்கும் மேலாக இயங்கி வரும் தாருல் அர்கம் முன்பள்ளி பாடசாலையின் 2023 ஆம் ஆண்டிற்கான சிறுவர் சந்தை நிகழ்வு பாடசாலை முகாமைத்துவப் பணிப்பாளர் அமீர பாறூக் தலைமையில் நடைபெற்றபோது.....**

**படங்கள்:** மாளிகைக்காடு நிருபர்கள்

# கள்ளச்சாராயம் தயாரித்த நபர் கைது

திருமலை நிருபர்

திருகோணமலை, மஹதிவுல்வெவ பகுதியில் சட்டவிரோத மதுபான தயாரிப்பில் ஈடுபட்டு வந்த வயோதிபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய் பிராந்தியத்துக்குப் பொறுப்பான குற்றத் தடுப்புப் பிரிவினரும் மொரவெவ பொலிஸ் உத்தியோகத்தர்களும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த நபரின் வீட்டு வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில், 25,000 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் மஹதிவுல்வெவ, சுவர்ணஜயந்திபுர பகுதியைச் சேர்ந்தவர் (65வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் தயாரிக்கப்படுவதாக பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய குறித்த சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்டதாகவும், வீட்டு வளாகத்தில் மதுபானத்தை மறைத்து வைப்பதற்காக கிடங்கு தோண்டப்பட்டிருந்தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கி வைப்பு



மட்டக்களப்பு நிருபர்

சமுர்த்தி உதவி பெறும் வறுமையான குடும்பத்திலுள்ள பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காத்தான்குடி பிரதேச செயலாளரின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கமைவாகவும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் வேண்டுகோளுக்கிணங்கவும் காத்தான்குடியைச் சேர்ந்த தனவந்தரிடமிருந்து 5 பாதணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு 166யு, 167யு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 5 மாணவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

# திருமலை மாவட்ட செயலாளர் மூதூர் பிரதேச செயலகத்திற்கு விஜயம்



தோப்பூர் செய்தியாளர்

திருகோணமலை மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட செயலாளர் சமிந்த கெட்டியாரச்சி, நேற்று முன்தினம் (15) மூதூர் பிரதேச செயலகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

மூதூர் பிரதேச செயலாளர் ஜனாப் எம்.பீ.எம். முபாறக்கினால் மாவட்ட செயலாளர் வரவேற்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், உதவிப் பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை முகாமையாளர், கிராம நிருவாக உத்தியோகத்தர் மற்றும் மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.




**அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பதி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் நேற்று (16) சிறப்பாக இடம்பெற்றது. ஆடி அமாவாசை விரதமிருந்து பிதுர்க்கடன் நிறைவேற்றி, பிண்டம் கரைக்கும் நிகழ்வுகளும் ஆலய வளாகத்தில் இடம் பெற்றன. (அம்பாறை நிருபர்கள்)**

# 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் தேசிய காங்கிரஸின் விசேட முன்மொழிவுகள்

## ஜனாதிபதியிடம் அறிக்கை கையளித்தார் அதாஉல்லா

*சாய்ந்தமருது செய்தியாளர்*

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பான தேசிய காங்கிரஸின் முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையை அதன் தலைவரும் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் (15) இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் கலாநிதி ஏ. உதுமாலெப்பை, பொருளாளர் ஜே.எம். வஸீர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்திருந்த வேண்டுகோளை ஏற்றே தேசிய காங்கிரஸ் தனது முன்மொழிவுகளை சமர்ப்பித்திருக்கிறது.



இம்முன்மொழிவுகள் பற்றி விரைவில் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படுமென்று கட்சியின் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாகப் பிரிந்திருக்க வேண்டுமெனவும் பொதுவாக மாகாண சபை முறைமை அவசியமற்றதெனவும் அது இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனவும் அதாஉல்லா கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட மருதமுனை அல் -மனார் மத்திய கல்லூரியில் சுற்றாடல் கழக மாணவர்களுக்கு சின்னம் சூட்டலும் தொப்பி அணிவித்தல் மற்றும் அடையாள அட்டை விநியோகமும் கல்லூரி அதிபர் ஐ.உபைதுல்லா தலைமையில் கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெற்றன. (படங்கள் - மாளிகைக்காடு நிருபர்)

# மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா



*மட்டக்களப்பு நிருபர்*



கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு ஸ்ரீ அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நேற்று முன்தினம் (15) இடம்பெற்றது. இதன்போது வசந்த மண்டபத்தில் வீற்றிருந்த விநாயகப்பெருமானுக்கு சிறப்பு தீபாராதனை இடம்பெற்றது.

மங்கள வாத்தியங்கள் முழங்க, வேத மந்திரங்கள் ஒலிக்க விநாயப் பெருமான் உள்வீதி வலம்வருதல் இடம்பெற்றது.

பின்னர் விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோஹரா கோஷத்தின் மத்தியில் தேர்த்திருவிழா இடம்பெற்றது.

தேர்த்திருவிழாவின் நிறைவில் சித்தர்கள் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்பட்டதுடன், தாகசாந்தி நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன ஒருங்கே அமையப்பெற்ற அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் நேற்று மாமாங்கப் பிள்ளையார் ஆலய தீர்த்தக் கேணியில் இடம்பெற்றதுடன், பிதிர்க்கடன் தீர்க்கும் கிரியைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரசவத்தின் பின்னர் தாயும் சேயும் உயிரிழப்பு

## மட்டு. போதனா வைத்தியசாலையில் சோகம்

*மண்டூர் செய்தியாளர்*

காத்தான்குடி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கிரான்குள பிரதேசத்தைச் சேர்ந்த தாயும் சிசுவும் உயிரிழந்த சம்பவமொன்று மட்டு.போதனா வைத்தியசாலையில் அண்மையில் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிரான்குள பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய இருபிள்ளைகளின் தாயான (ஆசிரியை) சின்னத்தம்பி சுபாஸ்ஜினி மற்றும் அவரின் இருநாள் பெண் குழந்தையுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். குறித்த குடும்பப் பெண் கர்ப்பம் தரித்து சத்திர சிகிச்சை மூலம் குழந்தையைப் பிரசவித்த நிலையில், குழந்தை கடந்த 08 ஆம் திகதி உயிரிழந்தது. இந்நிலையில், பிரசவத்தின் பின்னர் குறித்த தாய் உடல்நிலை சற்று பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். கடந்த 14 ஆம் திகதி தாயும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார்.

விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணரின் தலைமையிலான சட்ட வைத்தியர்களினால் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், உடற்கூறுகள் பகுப்பாய்விற்கு அனுப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலை மாணவர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு வழிகாட்டல் கருத்தரங்கு

*நிந்தவூர் செய்தியாளர்*

சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலையில் கல்விப் பொதுத் தராதர சாதரண தர மாணவர்களுக்கு நுகர்வோர் உரிமைகள் மற்றும் ஒழுங்கு முறைகள், நுகர்வோர் பாதிக்கப்படும் போது அவர்கள் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கானது அம்பாறை மாவட்ட செயலகத்தினால் நேற்று முன்தினம் (15) ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



கல்வியமைச்சினால் மாணவர்களுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்ட இந்நிகழ்வுக்கு வளவாளர்களாக நுகர்வோர் அதிகார சபை உத்தியோகஸ்தர் இஷட்.எம் ஸாஜீத் மற்றும் அம்பாறை மாவட்ட செயலக நூகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை புலன் விசாரணை உத்தியோகஸ்தர் என்.எம்.றிப்கான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு பாடசாலையின் அதிபர் திருமதி றிப்கா அன்ஸார் தலைமையில் ஆசிரியர்களான ஏ.எம்.லாபிர், ஸிப்னா மற்றும் மாணவர்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நூல் அறிமுக விழா

*மீரா நகர் செய்தியாளர்*

கலாநிதி ரவூப் செய்ன் (நழீமி) எழுதிய "முஸ்லிம் விவாக விவாகரத்துச்சட்டம் ஓர் இஸ்லாமிய நோக்கு" நூல் வெளியீடு மற்றும் அறிமுக விழா இன்று (17) மாலை 6.30 மணிக்கு அக்கரைப்பற்று மாநகர சபை ஹல்லாஜ் வள நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

மனித எழுச்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நூலை "ஆய்வுக்கும் மேம்பாட்டிற்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம்" வெளியிட்டு வைக்கவுள்ளது.

இந்நூல் தொடர்பாக நூலாசிரியர் கலாநிதி ரவூப் செய்ன் சிறப்புரையாற்றுவதுடன், கல்விமான்கள், புத்திஜீவிகள் மற்றும் உலமாக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காரைதீவு பகுதிகளில் பிடிக்கப்படும் அதிக எண்ணிக்கையிலான கீரி மீன்கள்

*பாறுக் ஷிஹான்*

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் அதிகளவான கீரி மீன்கள் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 வகை மீன்களான வளையா, சூரை, கிளவல்லா மீன்கள் என கரைவலைகள் மூலம் பிடிக்கப்பட்டு பல இலட்சம் மீன்கள் விற்பனையும் செய்யப்பட்டுள்ளன.



மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் கல்முனைப் பகுதிகளில் கீரி இன மீன்கள் நேற்று முன்தினம் (15) கரைவலைகளினால் பிடிக்கப்பட்டு அதிகளவான மீனகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஒரு கிலோ கிராம் கீரி மீனின் பெறுமதி சுமார் 400 ரூபா முதல் 500 ரூபா வரை விற்பனையாகியுள்ளதுடன், இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களினால் ஒரு மீனவரின் நாள் வருமானமாக 10 முதல் 20 இலட்சமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மருதமுனை, கல்முனை கடற்கரைகளில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி தூண்டில் மீன்பிடி என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையில், கரைவலை மீனவர்களுக்கு இவ்வாறான பாரியளவு சிறிய மீன்கள் தொகுதியாகப் பிடிபடுகின்றன.

## போடியார் புலம்பல்!



13 ஐ பற்றி பேசுவதற்கு இது உகந்த நேரம் இல்லையாம் எண்டு மொட்டுக்கட்சி பொதுச்செயலாளர் ஜனாதிபதிக்கு கடிதத்தில காரியவசம் சொல்லிப்போட்டாரு எலுவா..?

அப்ப பொருத்தமான நேரத்த அநுராதபுரத்தில இருக்கிற ஞானம் அக்கா சாத்திரியாரிடம் கேட்டு ஒரு நல்ல நாளா பார்த்து 13ஐ ப்பற்றி பேசுறதாம் சோக்கா இருக்கும்..!

இனி புரட்டாதி புறக்கப்போகுது. அடுத்த ஐப்பசிலயும் நாள் இல்ல.2024,ல ஜனாதிபதி தேர்தல நடத்தின பொறகுதான் இந்தியாவுக்கு போய் மோடி ஐயாட்ட நாள்குறிச்சித்து வந்து மீண்டும் பேய்க்காட்டலாம் ...!

# மேர்வினின் இனவாதப் பேச்சுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம்

## ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் அப்துல் மஜீத் குற்றச்சாட்டு

*அட்டப்பள்ளம் செய்தியாளர்*



வடக்கு,கிழக்கு தமிழ் மக்களுக்கெதிராக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா போன்றோர் இனவாதமாகப் பேசும் நிலையை ஏற்படுத்தியவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே என ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

''வடமாகாணத்தில் பௌத்த வழிப்பாட்டு ஸ்தலங்களுக்கு சேதம் ஏற்படுத்தினால் அங்குள்ளோரின் தலைகளைக் களனிக்கு கொண்டு வருவேன் என மேர்வின் கூறியது மிகக் கடுமையான - தவிர்க்க வேண்டிய வார்த்தையாக இருப்பினும், அவரது சமூக அக்கறை என்று பார்க்கும்போது இந்நிலைக்கு அவரை ஆக்கிய தமிழ் அரசியல்வாதிகளே பொறுப்பேற்க வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ நாசமாக்கிய நாட்டை ஜனாதிபதி ரணில் கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்த்திக்கொண்டிருக்கையில், நாடு அமைதியாக இருக்கும்போது இந்த நாட்டில் அடிக்கடி இனவாத சூட்டை உருவாக்குவது தமிழ்க் கட்சிகள்தான்.

சிங்களவர்களும் முஸ்லிம்களும் தமக்கு நேரத்துக்கு சாப்பாடு கிடைத்தால் மட்டும் போதும் என்றிருக்கும் போது 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் வேண்டும், வடக்கு, கிழக்கை இணைக்க வேண்டும், ஜனாதிபதி இனப்பிரச்சினை பற்றிப் பேச வேண்டும், சமஷ்டி வேண்டும் என தமிழ் இனவாதக் கட்சிகள் கூப்பாடு போடுவதால் சிங்களவர் களும் முஸ்லிம்களும் இக்கருத்துகளை எதிர்க்க வேண்டியுள்ளது.

போதாக்குறைக்கு சாணக்கியனும் ஆளுநர் தொண்டைமானும் தம் முட்டாள்தனமான இனவாத காட்டுமிராண்டி செயல்களால் சும்மா குறட்டை விட்டு தூங்கும் கிழக்கு முஸ்லிம் மக்களையும் உசுப்பேத்தி விட்டார்கள். இத்தகைய இனவாத கருத்துகள் அதிகரித்ததால்தான் காணாமல் போயிருந்த மேர்வின் சில்வாவும் வாளோடு கிளம்பி விட்டார். அவர் இந்தளவு பேச வழி சமைத்தது தமிழ்க் கட்சிகள்தான் என்பதை மறுக்க முடியாது. மேர்வினின் பேச்சில் பல உண்மைகள் உள்ளன. போகிற போக்கில் தமிழ்க் கூட்டமைப்பினர் மேர்வினை எம்.பியாக்கி விடுவார்கள் போலுள்ளது.

ஆகவே, நாட்டில் இனங்களுக்கிடையில் சூடேற்றுவதை சகலரும் தவிர்த்து அனைத்து மக்களினதும் அடிப்படைப் பிரச்சினையான பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிகோல அனைவரும் முயற்சிக்க வேண்டும்'' - என்றார்.

# வறட்சியால் மட்டக்களப்பில் 30 ஆயிரம் பேர்வரை பாதிப்பு

*மட்டக்களப்பு நிருபர்*

நாட்டில் நிலவும் கடும் வறட்சியினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் 8 ஆயிரத்து 892 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 508 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் 2,561 குடும்பங்களைச் சேர்ந்த 8,805 பேர் அதிக பட்சமாக வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவுகளில் 2,161 குடும்பங்களைச் சேர்ந்த 6,856 பேர், மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 1,729 குடும்பங்களைச் சேர்ந்த 6,300 பேர், போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் 1,438 குடும்பங்களைச் சேர்ந்த 4,341 பேர், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 853 குடும்பங்களைச் சேர்ந்த 2,681 பேர், கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 525 பேர் என வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இவ்வாறு வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் தேசிய அனர்த்த நிவாரண சேவைத் திணைக்களத்தினால் கடந்த மே மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

# 29ஆம் திகதிக்கு மாற்றப்பட்ட இலங்கை உதைபந்து சம்மேளன தேர்தல்

ஏ. அகீல் சிஹாப்

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் புதிய நிர்வாக சபைக்கான தேர்தல் அடுத்த மாதம் 16ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில், அது 29ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. பீபாவிடமிருந்து கிடைத்த கடிதம் ஒன்றின் அடிப்படையில் தேர்தல் நடைபெறும் திகதியில் தற்போது மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடுபவர்கள் தங்களது வேட்புமனுக்களை சமர்ப்பிக்க எதிர்வரும் சனிக்கிழமை வரை கால அவகாசம் அறிவிக்கப்பட்டிருப்பதோடு, தேர்தலில் போட்டியிடும் உத்தியோகபூர்வ வேட்பாளர்கள் குறித்து அறிவிக்க எதிர்வரும் 29ஆம் திகதிவரை கால அவகாசம், உதைபந்து சம்மேளனத்துக்காக கொடுக்கப்பட்டிருக்கின்றது.

செப்டெம்பர் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 3ஆம் திகதி வரையிலான காலப்பகுதி வேட்புமனுக்கள் தொடர்பிலான மேன்முறையீட்டுக்குரிய காலமாக நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதோடு, விடயங்கள் அனைத்தும் உறுதி செய்யப்பட்டு செப்டெம்பர் 4ஆம் திகதி அறிவிக்கப்பட வேண்டும்.

தேர்தலுக்கான மூன்று பேர் கொண்ட குழுவொன்றும் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றது. குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற முன்னாள் உயர்நீதிபதி யூ.எல்.எம்.மஜீத், பந்துல அத்தபத்து மற்றும் உபாலி குணசேகர ஆகியோர் குழு உறுப்பினர்களாக உள்ளனர்.

# எம்.ஐ. எமிரேட்ஸ் மற்றும் இலங்கை குழாமில் இடம்பிடித்த யாழ். வீரர் வியாஸ்காந்த்



ஏ. அகீல் சிஹாப்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த ஆண்டு ஜனவரியில் ஆரம்பமாகவுள்ள இன்டர்நெஷனல் டி20 லீக் தொடர் மற்றும் ஆசிய விளையாட்டு போட்டிக்கான இலங்கை கிரிக்கெட் அணியின் குழாமில் யாழ். மண்ணைச் சேர்ந்த சுழற்பந்துவீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்த் இடம்பெற்றுள்ளார்.

இன்டர் நெஷனல் டி20 லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் நிர்வாகத்துக்கு சொந்தமான எம்.ஐ. எமிரேட்ஸ் அணியில் வியாஸ்காந்த் விளையாடுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு எல்.பி.எல். தொடரில் சிறப்பான பிரகாசிப்பை வெளிப்படுத்தியிருந்த இவர், தொடரின் சிறந்த வளர்ந்துவரும் வீரராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இதேவேளை, சீனாவின் ஹாங்கூ நகரில் செப்டெம்பர் 23ஆம் திகதி முதல் ஒக்டோபர் 8ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவில் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியின் குழாமில் இடம்பெறும் வாய்ப்பையும் விஜயகாந்த் வியாஸ்காந்த் பெற்றுள்ளார்.



அட்டாளைச்சேனை அல் - ஆரியன் விளையாட்டுக் கழகம் நடாத்திய 23 வயதிற்குட்பட்ட அணிகள் கலந்து கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சுப்பர் சொனிக் அணியினரை பைனா அணி வீழ்த்தி சம்பியனானது.

(படம் - அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

# எல்.பி.எல். ப்ளேஓப் சுற்று இன்று ஆரம்பம்

## கொழும்பை வெளியேற்றி கண்டிக்கு அதிர்ச்சி கொடுத்த காலி

ஏ. அகீல் சிஹாப்




நடப்பு எல்.பி.எல். தொடரின் ப்ளேஓப் சுற்று போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. 05 அணிகள் பங்கேற்ற தொடரில் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி அதிர்ச்சி தோல்வியுடன் வெளியேற, காலி டைட்டன்ஸ், தம்புள்ள ஓரா, பி-லவ் கண்டி மற்றும் ஜப்னா கிங்ஸ் ஆகிய அணிகள் ப்ளேஓப் சுற்றுக்கு தகுதிபெற்றன.

கடைசி லீக் போட்டியில் கொழும்பு அணியினால் நிர்ணயிக்கப்பட்ட 75 ஓட்டங்கள் எனும் இலகுவான வெற்றியிலக்கை 11 ஓவர்களுக்குள் நிறைவு செய்தால் புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்துக்கு காலி அணியால் தகுதிபெறமுடியும் என்ற நிலையில், 8.3 ஓவர்களில் காலி அணி 02 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

ப்ளேஓப் சுற்றுக்கே தகுதிபெறுமா என்ற நிலையில் காணப்பட்ட காலி அணி அபார வெற்றியுடன் கண்டி அணிக்கு அதிர்ச்சி கொடுத்து குவாலிபையர் ஆட்டத்துக்கு தகுதிபெற்றது.

இன்று முதலாவது குவாலிபையர் போட்டியில் காலி டைட்டன்ஸ் அணி, தம்புள்ள ஓரா அணியை எதிர்கொள்ளவுள்ளதுடன், பி லவ் கண்டி மற்றும் ஜப்னா கிங்ஸ் ஆகிய அணிகள் எலிமினேட்டர் போட்டியில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத் துளிகள்

2023ஆம் ஆண்டுக்கான ஒருநாள் ஆசியக் கிண்ணத் தொடரில் பங்கெடுக்கும் 17 பேர் கொண்ட நேபாள கிரிக்கெட் அணிக்குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. நேபாள கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஞானேந்திர மல்லாவின் ஓய்வுக்குப் பின்னர் அறிவிக்கப்பட்டுள்ள நேபாள அணியானது, ஆசியக் கிண்ணத் தொடரில் 20 வயது நிரம்பிய ரோஹிட் பௌடேல் மூலம் வழிநடத்தப்படவிருக்கின்றது. பௌடேல் நேபாள கிரிக்கெட் அணியினை இதுவரை 27 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் வழிநடத்திய அனுபவத்தினைக் கொண்டிருக்கின்றார்.

★★★★★★★★★★★★★★★

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர் சஹீன் ஷா அப்ரிடி ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள இன்டர்நெஷனர் டி20 லீக் தொடரின் டெசர்ட் வைப்பர்ஸ் அணிக்காக அடுத்து வரும் மூன்று வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு பி.சி.பி விளையாடுவதற்கான அனுமதியை வீரர்களுக்கு வழங்கவில்லை. எனினும், இம்முறை பாகிஸ்தான் வீரர்கள் விளையாடுவதற்கான அனுமதியை பி.சி.பி வழங்கியுள்ளது.

★★★★★★★★★★★★★★★

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டீவன் ஃபின் அனைத்து வகையான கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். கடந்த 06 ஆண்டுகளாக இங்கிலாந்து அணிக்காக எந்தவொரு சர்வதேச கிரிக்கெட் போட்டியிலும் விளையாடாத ஸ்டீவன், சர்வதேச கிரிக்கெட்டில் தனது ஓய்வு முடிவை அறிவித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★

ஐ.சி.சியின் ஜூலை மாதத்துக்கான சிறந்த கிரிக்கெட் வீரருக்கான போட்டியில் இங்கிலாந்து அணியின் கிரிஸ் வோக்ஸ், ஷெக் கிரவ்லே மற்றும் நெதர்லாந்தின் பாஸ் டி லீட் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்ட நிலையில், சிறந்த வீரராக கிரிஸ் வோக்ஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இங்கிலாந்தில் கடந்த மாதம் நடைபெற்ற ஆஷஷ் தொடரில் மூன்று போட்டிகளில் மாத்திரம் 19 விக்கெட்டுகளை கிரிஸ் வோக்ஸ் வீழ்த்தியிருந்தார்.



விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# அரேபியா நோக்கி படையெடுக்கும் ஐரோப்பிய நட்சத்திரங்கள்

சவூதி அரேபிய உதைபந்து அணி ஒன்றில் கிறிஸ்டியானோ ரொனால்டோ இணைந்த பிறகு தற்போது ஐரோப்பாவில் இருந்து உச்ச நட்சத்திரங்கள் பலர் வரிசையாக அங்குள்ள உதைபந்து அணிகளில் ஒப்பந்தம் செய்துகொள்ள முடிவு செய்துள்ளனர்.

போர்த்துக்கல் உதைபந்து நட்சத்திரம் ரொனால்டோ பிரான்ஸ் உதைபந்து நட்சத்திரம் கரீம் பென்சிமா வரிசையில் பலர் சவூதி அணிகளில் களமிறங்கவுள்ளனர். பிரேஸிலின் சூப்பர் ஸ்டார் நெய்மர் அல் ஹிலால் அணியில் இணையவிருக்கிறார்.

NGolo Kante ஆண்டுக்கு 110 மில்லியன் டொலர் ஒப்பந்தத்தில் Al-Ittihad அணியில் இணைந்துள்ளார். Roberto Firmino சவூதியின் Al Ahli அணிக்காக களமிறங்கியுள்ளார்.

அல்ஜீரிய நட்சத்திரம் Riyadh Mahrez 39 மில்லியன் டொலர் ஒப்பந்தத்தில் சவூதியின் Al Ahli அணியில் இணைந்துள்ளார். Sadio Mane அல் நஸ்ஸர் அணிக்காக 30 மில்லியன் டொலர் தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

போர்த்துகல் நட்சத்திரம் Ruben Neves அல் ஹிலால் அணிக்காக 60 மில்லியன் டொலர் தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். செனகல் நட்சத்திரம் Kalidou Koulibaly அல் ஹிலால் அணிக்காக 21.6 மில்லியன் டொலர் தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

செர்பிய உதைபந்து நட்சத்திரம் Sergej Milinkovic Savic அல் ஹிலால் அணிக்காக 44 மில்லியன் டொலர் தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். பிரேஸில் நட்சத்திரம் Fabinho அல்-இத்திஹாத் அணிக்காக 51 மில்லியன் டொலர் தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

பிரேஸில் அணியின் இன்னொரு நட்சத்திர வீரர் Malcom அல் ஹிலால் அணிக்காக 66 மில்லியன் டொலர் தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

# மத்திய மாகாண உதைப்பந்தாட்ட சம்பியனான கண்டி களுகமுவ மத்திய கல்லூரி



கண்டி நிருபர்

இலங்கை பாடசாலை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 18 வயதுக்குட்பட்ட போட்டிப் பிரிவில் கண்டியைச் சேர்ந்த கெலிஓய - கழுகமுவ மத்திய கல்லூரி அணி மத்திய மாகாண உதைப்பந்தாட்ட சம்பியனானது.

கம்பளை ஸாஹிரா கல்லூரியில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கொட்டகலை தமிழ் வித்தியாலய அணியுடன் விளையாடி 5:4 என்றகோல் கணக்கில் வெற்றிப்பெற்றது.

அதே நேரம், இதே பாடசாலையைச் சேர்ந்த 16 வயதுக்குட்பட்ட உதைப்பந்தாட்ட அணி, கண்டி திருத்துவக் கல்லூரியுடன் இறுதிப் போட்டியில் விளையாடி அதிலும் சம்பியனானது. எனவே, இவ்விரு அணிகளும் அகில இலங்கை ரீதியில் போட்டியிடவுள்ளன.

# உலகக்கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறியது ஸ்பெய்ன்

ரமணி

நியூஸிலாந்தின் எடன் பார்க் மைதானத்தில் நடந்த உலகக்கிண்ண அரை இறுதிப் போட்டியில் சுவீடனை எதிர்த்து விளையாடிய ஸ்பெய்ன் 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றிப் பெற்று இறுதி போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

பரபரப்பாக நடந்த அரை இறுதிப் போட்டியில் இரண்டு ஐரோப்பிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின. 80ஆவது நிமிடம் வரை இரண்டு அணிகளும் கோல் அடிக்கவில்லை. 81ஆவது நிமிடத்தில் ஸ்பெய்ன் வீராங்கனை சல்மா கோல் அடித்தார். பதிலுக்கு சுவீடன் வீராங்கனை ரெபெக்கா 88ஆவது நிமிடத்தில் ஒரு கோலை அடிக்க ஆட்டம் சமநிலையை எட்டியது. சுவீடன் வீரர்களும் ரசிகர்களும் உற்சாகமடைந்தனர். அந்த உற்சாகம் அடுத்த நிமிடம் கரைந்துபோனது. 89ஆவது நிமிடத்தில் கார்மோனா கோல் அடித்தார். 2:1 என்ற கோல்கணக்கில் ஸ்பெய்ன் முன்னிலை பெற்றது. அதுவே வெற்றிக் கோலாகியது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பிரான்ஸில் நடைபெற்ற அரையிறுதியிலும் கடந்த ஆண்டு ஐரோப்பிய சம்பியன்ஷிப்பில் கடைசி நான்கிலும் தோல்வியடைந்த சுவீடன், இந்த ஆண்டு மகளிர் அரை இறுதியிலும் தோல்வியடைந்தது. சுவீடன் ஐந்து அரையிறுதிப் போட்டிகளில் விளையாடி நான்கில் தோல்வியடைந்துள்ளது. நான்காவது முறையாக மூன்றாவது இடத்தைப் பிடிக்க முயற்சிக்கும்.

இரண்டு முறை பலோன் டிஓர் வென்ற



ஸ்பெய்ன் வீராங்கனை அலெக்ஸியா புட்டெல்லாஸ், மூன்றாவது உலகக் போட்டியில் விளையாடுகிறார்.

சுவீடன் இதுவரை உலகக் கிண்ணத்தை வென்றதில்லை. 2003 இல் ரன்னர்-அப், மூன்று முறை மூன்றாவது இடத்தைப் பிடித்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு டோக்கியோ ஒலிம்பிக்கில் சுவீடன் வெள்ளிப் பதக்கம் வென்றது. மேலும் 2016இல் பிரேஸிலில் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7